



உதயன்

பக்கங்கள் - 16 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 161 சித்திரை 21 ஆம் நாள் திங்கட்கிழமை 04 மே 2020 வள்ளுவர் ஆண்டு 2051


# 'ஆட்டையை' போட்ட அரசியல்வாதி; நியமிக்கப்பட்டது விசாரணைக் குழு

## தேர்தல்கள் ஆணைக்குழு அதிரடி

யாழ்ப்பாணம், மே 4

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு தன்னார்வக் கொடையாளிகளால் வழங்கப்பட்ட நிவாரணங்களை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போதைய வேட்பாளருமான ஒருவரின் ஆதரவாளர்களுக்கு வழங்கியதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு மூன்று பேர் கொண்ட குழுவை தேர்தல்கள் ஆணைக்குழு நியமித்துள்ளது.

இந்தத் தகவலை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய கட்சிச் செயலர்களுடனான கூட்டத்தில் தெரிவித்துள்ளார். 14 ➤

## ஒரே நாளில் 1,681 சோதனைகள்

கொழும்பு, மே 4

இலங்கையில் நேற்று முன்தினம் மாத்திரம் ஆயிரத்து 681 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட அதிகூடிய பி.சி. ஆர் பரிசோதனைகள் இவையே என்று சுகாதார சேவைகள் 14 ➤

# திட்டமிட்ட திகதியில் தேர்தலை நடத்துக!

## தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கோத்தாபய உத்தரவு

கொழும்பு, மே 4

நாடாளுமன்றத் தேர்தலை திட்டமிட்ட திகதியில் தேர்தல்கள் ஆணைக்குழு நடத்தியே ஆகவேண்டும்.

தேர்தலைக் குழப்பியடிக்கும் வகையில் யாராவது வழக்குத் தொடுத்தால் அதற்குரிய பதிலை நீதிமன்றத்துக்கு நான் வழங்குவேன். இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

நீதிமன்றம் தடைவிதிக்காவிடின் 14 ➤

## 21 மாவட்டங்களில் இன்று ஊரடங்கு தளர்வு

கொழும்பு, மே 4

யாழ்ப்பாணம் உட்பட 21 மாவட்டங்களில் பொலிஸ் ஊரடங்கு சட்டம் இன்று காலை 5 மணிக்கு தளர்த்தப்படவுள்ளது.

எனினும், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தற்போது நடைமுறையில் உள்ள ஊரடங்கு எதிர்வரும் 11 ஆம் திகதி அதிகாலை 5 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

21 மாவட்டங்களில் இன்று திங்கட்கிழமை முதல் புதன்கிழமை வரை காலை 5 மணி முதல் இரவு 8 மணிவரை ஊரடங்குச் 14 ➤

## கொரோனா தொற்று 718

**184 பேர் குணமடைவு**
**527 பேர் சிகிச்சையில்**
**176 பேர் கண்காணிப்பில்**

கொழும்பு, மே 4

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 16 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு 11.50 மணியளவில் 3 பேர் அடையாளம் 14 ➤

### பிரதமர் மஹிந்தவின்

## கூட்ட ஒழுங்கமைப்பில் மாற்றம்; கூட்டமைப்பினர் கடும் அதிருப்தி

கொழும்பு, மே 4

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று நடைபெறவுள்ள கூட்ட ஒழுங்கமைப்பில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இது எமக்குக் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார். 14 ➤

## வாள்வெட்டில் ஒருவர் சாவு

சாவகச்சேரி, மே 4

மிருசுவில் பகுதியில் நேற்றிரவு 7 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இருவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். 14 ➤

## கூட்டமைப்பின் முடிவில் மாற்றம் எதுவும் இல்லை

### கூட்டத்தில் பங்கேற்போம் என மாவை திட்டவட்டம்

யாழ்ப்பாணம், மே 4

அலரி மாளிகையில் இன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நடைபெறவுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பங்கேற்பார்கள். இந்த முடிவில் மாற்றம் எதுவும் இல்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை 14 ➤

## 113 உறுப்பினர்கள் புறக்கணிப்பு

கொழும்பு, மே 4

பிரதமர் மஹிந்த ராஜபக்ச விடுத்தி ருக்கும் இன்றைய கூட்டத்து க்கான அழைப்பை எட்டாவது நாடாளுமன்றத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 113 பேர் புறக்கணி த்துள்ளனர். 14 ➤

## இந்த மாதமும் 5 ஆயிரம் ரூபா

கொழும்பு, மே 4

நாட்டில் கொரோனா தொற்று ஏற்பட்டதை அடுத்து மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவும் வகையில் அரசால் வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை இந்த மாதமும் வழங்குதற்கு அரசு தீர்மா 14 ➤

## நாடு இருக்கின்ற நிலையில் தேர்தல் இப்போது வேண்டாம்

### சுதந்திரக் கட்சி வலியுறுத்து

கொழும்பு, மே 4

நாடு தற்போது இருக்கின்ற நிலைமையில் நாடாளுமன்றத் தேர்தல் இப்போதைக்கு வேண்டாம். முதலில் மக்களின் அவலநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க 14 ➤

# உதயன்

## மீதான படுகொலையின் நினைவேந்தல்








உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

## 3ஆம் ஆண்டு நினைவுகளுடன்...

அன்னை மடியில் 03 • 06 • 1976

ஆண்டவரின் மடியில் 02 • 05 • 2017



அமரர்

### அருள்வதனன் டொறின் மேரி

பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
நேசத்தில் அருள் மொழியாய்
வதனத்துடன் வாழ்ந்தவளே!
சபியோடு ரிசாவும்
நிறைவாக நிபோவும்
கருத்தாங்கி உருக்கொடுத்து
கண்மணியாய் வளர்த்தவளே
காலத்தின் சதியோ
கடவுளின் சித்தமோ
கலங்க வைத்து சென்று
கடந்ததுவோ மூன்றாண்டு
காலங்கள் கடந்தாலும் - உங்கள்
கனிமொழிகள் என்றும் வாழும் அம்மா

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.
077 645 0304

கணவன் அருள்வதனன்,
பிள்ளைகள்
சபிஷன், ரிசாநாத், நிபோஷன்,
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி
க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் 9A பெற்ற
எமது மைந்தன்

### அருள்வதனன் சபிஷன்



மகாஜனாவின் மைந்தனிவன்
மரியாதை கொண்டவனாய்
ஆசான்களின் அறிவுரை நடந்து
அனைத்திலும் திறமைச் சித்திபெற்று
கல்லூரி ஆசான்களுக்கும்
கற்பித்த யாவருக்கும்
காலத்தால் அழியாத
கனிவான நன்றிகள்
கல்வியில் என்றும்
கலங்கரைத் தீபம்போல்
ஞானமுடன் ஞாலத்தில்
வாழ்க ! வாழியவே!

Congratulations

மேலும் இறையாசிகளுடன் சிறப்பாக உயர்தரத்தில் கற்று
இலட்சியப் பாதையில் வெற்றி பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.
077 645 0304

அருள்வதனன் குடும்பம்

## விற்பனைக்கு உண்டு

யாழ். நாவலர் வீதியில் கிரவல் மண்
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 773 0567

## அடையாள அட்டை அச்சிடல்

அரச, தனியார், வர்த்தக நிறுவனங்களுக்கான
அடையாள அட்டைகளை அச்சிட்டு
பெற்றுக்கொள்ளலாம்.

ஈஸ்வர் டிஜிட்டல் அச்சகம்
461, K.K.S. Road, Jaffna.

தொடர்பு: 077 165 9845

## யாழ் நகரில் மாடி வீடு வாடகைக்கு உண்டு

Full AC, Non AC **கீழ் வீடு** 3 றூம். 1 பெரிய கோல். அற்றாச் பாத் றூம். **மேல் வீடு** 3 றூம். 1 பெரிய கோல். அற்றாச் பாத் றூம்.

கடற்கரை வீதி, ஹோலிகுறொஸ் ஆஸ்பத்திரி அருகாமையில்.

தொடர்பு: 021 222 7893, 077 615 667

## வீடு வாடகைக்கு

இருபாலை Old Road இல் 4
அறைகள் கொண்ட வசதியான வீடு
வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0777 037 058

## ES Printers

மக் பிரிண்ட்
(MUG)
450/=



# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472

## பெறுகைக்கான அழைப்பு
## மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மாகாணம்
### சிற்றுண்டிச்சாலையினை குத்தகைக்கு வழங்குதல்

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ்வரும் விவரப்படியான சிற்றுண்டிச்சாலையினை நடத்துவதற்கு திணைக்கள பெறுகைக்குழு (பெரியது) முத்திரையிடப்பட்ட பெறுகை களினை கோருகின்றது.

| விவரம் | மாகாண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கல்வி நிலையம் (PICTEC) |
|---|---|
| அமைவிடம் | மரக்காரம்பளை, வவுனியா |
| பெறுகை இலக்கம் | NP/PDE/PRO/CAN/PIT/2020/16 |
| காலப்பகுதி | 01.07.2020 – 30.06.2021 |
| படிவங்களை பெறுதல், சமர்ப்பித்தல் | வலயக் கல்வி அலுவலகம், வவுனிய தெற்கு, வவுனியா |
| தொலைபேசி இலக்கம் | 024-2222026 |
| பெறுகை முன்னறிவிப்புக் கூட்டம் | 12.05.2020 |

2. பெறுகைகள் அனைத்தும் தேசிய விலைக்கேள்வி அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.
3. தகுதியான கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் தமது பெயர் வராது இருப்பதனை உறுதிப்படுத்துபவர் கீழ்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அ) தற்போதும் செல்லுபடியாக உள்ள உணவு வழங்கலுக்கான வியாபாரச்சான்றிதழ்.
ஆ) பதிவானது வடமாகாணத்திற்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர் பெறுகை உள்ளடக்கம் II, உசாவுகை உள்ளடக்கம் (உஉ) இல் கூறப்பட்ட தகைமைகளினை நிறைவுசெய்திருத்தல் வேண்டும்
5. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் **வலயக் கல்வி அலுவலகத்தில்** கிடைக்கும் 'Application for Bid Documents' என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா **500** காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் **06.05.2020** தொடக்கம் **26.05.2020** வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
6. விலைக் கேள்விகள் **27.05.2020** திகதி **10.00** மணிக்கு முன்பதாக **வலயக் கல்வி வலயக் கல்வி அலுவலகத்தின்** கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
7. கூறுவிலை சமர்ப்பித்தல் திகதியில் நாட்டில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலையால் அரசாங்க அறிவித்தலின்படி அலுவலகம் மூடப்பட்டிருப்பின் அடுத்துவரும் அலுவலக நாளில் அதே நேரம் சகல நடைமுறைகளும் அமுலில் இருக்கும்.
8. மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் கணக்காளர் **வலயக் கல்வி அலுவலகத்தின்** தொலைபேசி இலக்கம் உடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
9. இது தொடர்பான பெறுகை முன்னறிவிப்பு கூட்டம் (Pre bid meeting) **மேற்காட்டப் பட்டவாறு** காலை 10.00 மணிக்கு **வலயக் கல்வி அலுவலகத்தின்** கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
10. கிடைக்கப் பெற்ற விலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

பெயர் :- செ. உதயகுமார்
பதவி :- தலைவர்/மாகாணக் கல்விப் பணிப்பாளர், திணைக்கள பெறுகைகள் குழு.
முகவரி :- மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.செம்மணி வீதி, நல்லூர்
தொலைபேசி :- 021-2242804/021-2242800
தொலைநகல் :- 021-2242646/021-2241383
மின்னஞ்சல் :- npedufin@gmail.com

## வீட்டிற்கும் வேலைக்கும் வாசற்படியில்



சுத்தமாக சுகாதாரமாக
தயாரிக்கப்பட்ட
அறுசுவை
உணவு வகைகளை
தருவதில் பெருமை
கொள்கிறோம்!
ஒடியல் கூல் முதல்
அப்பம் றோல்ஸ்
என
பல வகை

077 734 0026
021 222 6868




Virounthu @ Yarl pardy
யாழ்பாடி

49-51 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Amman Road, Nallur, Jaffna.

தம்பி

# நினைவுகளில் எரியும் நெருப்பு

## மரணத்தை கையில் வைத்தபடி அச்சேறிய செய்தி


உதயன்
உதயன் அலுவலகத்திற்குள் புகுந்து
ஆயுததாரிகள் நேற்று வெறியாட்டம்
இருவர் பலி!

02.05.2006

சுவர் ஏறிக் குதித்து வந்தவர்களில் நால்வர் முதலில் அலுவலகப் பாதுகாப்பு ஊழியர் இருக்கும் இடத்துக்குச் சென்று அவரை துப்பாக்கி முனையில் கீழே படுக்க வைத்தனர். நிமிர்ந்தால் சுட்டுவிடுவோம் என்று மிரட்டி விட்டு அவர் அருகில் ஒரு ஆயுததாரி நின்று கொண்டான். ஏனையவர்களில் இருவர் அலுவலகம் முன்புறம் இருந்த சந்தைப்படுத்தல் முகாமையாளரின் அலுவலகம் நோக்கிச் சென்றனர். எந்தக் கேட்டுக் கேள்வியும் இன்றி அவர் மீது சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். அவர் இருந்த இடத்திலேயே மடிந்து விழுந்தார்.

பின்னர் அங்கிருந்து திரும்பிய அவர்கள் பாதுகாப்பு அலுவலரின் அருகோடு இருந்த விநியோகப் பகுதிக்குள் நுழைந்தனர். அங்கு பணி புரிந்து கொண்டிருந்த அனைவரையும் முதலில் கீழே இருக்குமாறு கூறித் தாறுமாறாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பின்னர் அனைவரையும் கீழே படுக்குமாறு கூறினர். எவரும் நிமிர்ந்து பார்க்கக்கூடாது என்று கூறிவிட்டு மீண்டும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அதில் பாதுகாப்பு ஊழியருக்கு அருகே நிலத்தில் படுத்திருந்த விநியோகப் பகுதி ஊழியரான உதயகுமார் காயமடைந்தார். காயம் பட்டதும் அவர் "ஐயோ" என்று எழுப்பிய குரலைக் கேட்டு துள்ளி நிமிர்ந்து பார்த்து ரஞ்சித்தை நோக்கி ஆயுததாரி துப்பாக்கியால் சுட்டான். பாதகன், காயமடைந்து கீழே விழுந்த அவரின் முதுகில் காலை வைத்து மீண்டும் அவர் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தான். அதனால் அவரும் அந்த இடத்திலேயே மடிந்தார்.

விநியோகப்பிரிவில் இருந்த உதவி விநியோக அலுவலரின் தலையில் துப்பாக்கி வைத்து மிரட்டி "எங்கேயடா கெட் ஒபீஸ், காட்டு" எனக் கேட்டனர். பின்னர் துப்பாக்கி முனையில் அவரை இழுத்துச் சென்று ஆசிரியர் பீடத்தைக் காட்டுமாறும் மிரட்டியதுடன் குறித்த செய்தியாசிரியரின் பெயரைக் கூறி "அவன் எங்கே?" என்று கேட்டனர். பாதுகாப்பு ஊழியரின் பகுதியிலிருந்து உள்ளே ஆசிரியர் பீடத்துக்குச் செல்லும் வரையும் கண்ணில் கண்ட இடமெல்லாம் சகட்டு மேனிக்குத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதை அடுத்து சுதாகரித்துக் கொண்ட ஆசிரியர் பீட ஊழியர்கள் மறைவிடம் ஒன்றில் பதுங்கிக் கொண்டனர் என்பதால் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிக் கொண்டனர்.

சகட்டு மேனிக்கு ஆசிரியர் பீடத்துக்குள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட ஆயுததாரிகள் மூவரும் பின்னர் விநியோக அதிகாரியையும் இழுத்துக் கொண்டு படிகளில் இறங்கத் திரும்பினர். எனினும் திடீர் என விழிப்பு வந்தவர்களாக அவர்களில் ஒருவன் ஓடிச் சென்று கணினி அறைக்குள் புகுந்து கன்னாபின்னா என்று சுட்டுத் தள்ளினான்.

இதில் அங்கிருந்த கணினிகள் அனைத்தும் சிக்கிச் சிதறி சின்னாபின்னமாகின. பத்திரிகையைப் பிரசுரிப்பதற்கு முடியாத அளவுக்கு அனைத்துக் கணினிகளும் சல்லடைகளாகத் துளைக்கப்பட்டன.

அதன்பின்னர் அங்கிருந்து வெளியேறிய ஆயுததாரிகள் சென்ற இடங்களில் எல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். மீண்டும் பாதுகாப்பு ஊழியரின் பகுதிக்குச் சென்ற ஒருவர், பத்திரிகையின் அச்சகப் பகுதிக்குச் சென்று தாக்க வேண்டும் என்று அரைகுறைச் சிங்களத்தில் தெரிவித்துள்ளார்.

எனினும் மற்றையவர் அதை மறுத்து "நேரமாகிவிட்டதால் உடனடியாக நாங்கள் செல்ல வேண்டும்" என்று சிங்களத்தில் பதிலளித்துள்ளார்.

துப்பாக்கிமுனையில் தம்முடன் இழுத்துச் சென்ற விநியோக உதவி அதிகாரியைக் கீழே படுக்குமாறு கூறிவிட்டு , வீதிக்குச் சென்று மோட்டார் சைக்கிளில் ஏறி தப்பித்துச் சென்று விட்டனர் கொலையாளிகள். இன்னும் அவர்கள் யாரென்று தெரியாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் பொலிஸார்.

"7 மணிக்கு வேலையைத் தொடங்கினன். கொஞ்சத்தால ஒரு வெடிச் சத்தம் கேட்டுது. அந்த நேரத்தில அது வழமைதானே. யாரையோ சுடுறாங்கள் எண்டுட்டுப் பேசாம இருந்திட்டம். கொஞ்சத்தாலதான் எங்கட செக்கியூரிட்டிப் பொயிண்டிலதான அது நடந்திருக்கு எண்டு தெரிஞ்சிது. அப்பேக்க கனக்க வெடிச் சத்தம் கேக்கத் தொடங்கிற்று.
மேல தான் வாறாங்கள் எண்டு விளங்கிட்டு, உடன ஓடி ஒளிச்சிட்டம். மேல வந்து தேடித் தேடி எல்லா இடமும் சுட்டாங்கள். கீழ இறங்கிப் போயிற்றுத் திருப்பி மேல வந்து கொம்பியூட்டர் எல்லாத்துக்கும் சுட்டாங்கள்.
எல்லாம் முடிய நாங்கள் கீழ போய் பாக்கேக்க 2 பேர் செத்துக் கிடந்திச்சினம். 2 பேருக்குக் காயம். பிறகு என்ன செய்தம் எண்டதே நினைவில்லை. ஆனால் அடுத்தநாள் பேப்பர் வந்தது. இரவிரவா வேலை செய்தம். எதைத் தொடவும் பயமா இருந்தது.
நாங்க அந்த நேரத்தில செத்தம் எண்டுதான் நினைச்சம். கிட்டத்தட்ட 15 நிமிசம். பயத்தில செத்துப் போன நேரம் அது."

*உதயன் மீதான கொடூரத் தாக்குதலின் போது அங்கிருந்து உயிர் தப்பிய பணியாளர்களின் நினைவுப் பகிர்வு*

இலங்கையில் சுதந்திரம் பேசும் அனைவரதும் குரல்களும் நெரிக்கப்பட்டே வந்திருக்கின்றன. கருத்துச் சொல்லிகளாகவும், கருத்து உருவாக்கிகளாகவும் இருக்கும் ஊடகங்கள் மிக மோசமான வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதும் தொடர் கதையாகவே உள்ளது.

அதிகாரத்துக்கு எப்போதெல்லாம் இந்த ஊடகங்கள் வலி தருகின்றனவோ அப்போதெல்லாம் அது தனது காட்டுமிராண்டித்தனத்தைக் காட்டத் தவறுவதில்லை. அலுவலகங்களுக்குள் பகலிலும், இரவிலும் கண்மூடிய துணிச்சலுடன் இறங்கிச் சுட்டுத் தள்ளித் தனது வெறியைத் தீர்த்துக் கொள்கின்றது.

தமிழர்களின் உரிமை சார்ந்த விடயங்களை மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக தமிழ்ப் பரப்பில் பேசி வரும் உதயன் பத்திரிகை ,இதே அதிகாரத்தின் சவால்களை எதிர்கொண்டு வருவதைத் தமிழ் மக்கள் உணர்ந்தபடியே வாசிக்கின்றனர்.


ஒவ்வொறு முறையும் நிகழ்த்தப்படும் உதயன் மீதான கொடூரத் தாக்குதல்கள் தமிழ் மனங்களை அச்சுறுத்துவதாகவே அமைகின்றன. இவ்வாறான கொடூரமானதொரு நினைவை உதயனுக்கும் தமிழர்களுக்கும் அதிகாரம் தந்து நேற்று முன்தினத்துடன் 14 ஆண்டுகள் கடந்துள்ளன.

ஊடக சுதந்திரம் வேண்டிய கனதியான நாளொன்றில் இந்தப் படுகொலை நடந்தது. அந்தக் காலத்தில் தமிழ் பரப்பெங்கும் விரிந்திருந்த இனந்தெரியாத சுட்டுக் கொலைகள் "உதயன்" மீதும் காட்டுத்தனத்தைக் காட்டியது. (ஆனால் யார் செய்தனர் என்று எல்லோருக்கும் தெரிந்திருந்தது.)

இரவுப் பணிக்கு ஊடகப் பணியாளர்கள் தயாராகிக் கொண்டிருக்கையில் சுவரேறிப் பாய்ந்தது குரூரம். கண்ணில் கண்டவைகளை எல்லாம் சுட்டுத் தள்ளின அவர்களிடமிருந்த துப்பாக்கிகள். அங்கு பணியாற்றிய இருவரைப் பலியெடுத்ததுடன் தமது வெறியைத் தீர்த்துக் கொண்டனர் துப்பாக்கிதாரிகள்.

நேற்றுடன் 14 ஆண்டுகளைக் கடந்து விட்டது அந்தப் படுகொலை நாள். ஆனால் அவர்கள் நினைத்தது போன்று அந்த ஊடகத்தின் பணியைத் தடுத்து நிறுத்த முடியாது போனது. மரணம் சூழ்ந்திருந்தபோதும் தனது பணியை உதயன் ஆற்றியது. அச்சுறுத்தல்களோடு பயணித்துத் தன்னை நோக்கி நீளும் தடைகளை உறுதியோடு எதிர்கொள்வதால்தான் காலப் பெருவெளியில் கரைந்து போகாது இன்றும் நிலைத்து நிற்கின்றது உதயன்.

இந்தப் படுகொலையின் பின்னரும் வழமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இலங்கையில் எழுதப்படாத விதியாக இருக்கும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாத, தண்டிக்கப்படாத நிலமைகள் இந்தப் படுகொலைகளிலும் தொடர்கின்றன.


மூன்று மோட்டார் சைக்கிள்களில்
வந்த 7 பேரே தாக்குதலாளிகள்!
பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உறுதியோடு நிற்பான் உதயன்

*சர்வதேச பத்திரிகைச் சுதந்திர தினம் நேற்று( 03.05.2006) 'உதயன்' அலுவலகம் மீதான மிலேச்சத்தனமான– கொடூர மான– ஆயுததாரிகளின் வெறியாட்டம் பற்றிய செய்திகள் பத்திரிகைகள் அனைத்திலும் முக்கியத்துவம் கொடுத்து பிரசு ரித்திருக்க விடிந்திருக்கின்றது.*

இந்த வெறியாட்டம் – காட்டுத் தர்பார்– தனி ஒரு நிறுவனத்துக்கு எதிரானது அல்ல. ஒட்டுமொத்த தமிழ்த் தேசியத்துக்கும் அதன் எழுச்சிக்கும் விழுந்த மரண அடி இது.

ஊடக சுதந்திரத்திற்காக நேற்றுமுன்தினம் முன்னிரவு 7 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக இலங்கையின் பல்வேறு ஊடகவியலாளர்களும் ஒன்றுகூடி, தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் விதத்தில் ஐக்கியப் பட்டு மெழுகுதிரி தீபங்களை ஏற்றித் தமது பணியின் மீதான பற்றுறுதியை வெளியிட்ட அதேசமயம், 'உதயன்' அலுவலகத் துக்கு முன் ஆயுததாரிகளின் துப்பாக்கிகள் கனன்றிருக்கின்றன.

இலங்கையில் ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிரான – படுமோசமான– குரூர– தாக்குதல்களில் பெரும்பா லானவை தமிழ் ஊடகங்களுக்கு எதிராகவே புரியப்பட்டு வந்துள்ளன. அந்த வகையில் ஈழத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் பிரதிபலித்து, அவர்களின் தேசியத்தை முன் னிலைப்படுத்தி வரும் 'உதயன்' பல்வேறு இன்னல்களைக் கடந்து இரண்டு தசாப்தகால– இருபது ஆண்டுகால – வரலாற் றில் சந்தித்திருக்கின்றான்.

ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தல்கள், இந்திய அமைதிப் படை யினரின் நேரடித் தாக்குதல்கள்– நெருக்குதல்கள்– மிரட்டல்கள், இலங்கை விமானப்படை இலக்கு வைத்து பணிமனை மீது நடத்திய வான் வழிக் குண்டுவீச்சு, பத்திரிகை அலுவலகம் சீல் வைப்பு, கல்வெறிகள், இடப்பெயர்வுகள், கைக்குண்டுத் தாக் குதல்கள், செய்தியாளர் படுகொலை, களப் பணியாளர்கள் மீதான தாக்குதல்கள் என்று 'உதயன்' எதிர்கொண்ட இடுக்கண் கள், அழுத்தங்கள் பலப்பல. அந்த வரிசையில் இந்த வெறி யாட்டமும் சேர்ந்து கொண்டு இரண்டு ஊழியர்களைப் பலி கொண்டு மேலும் சில ஊழியர்களைப் படுகாயப்படுத்தி, பல லட்சம் ரூபா உடைமைகளை நாசம் செய்து, தன் பணி மீதான 'உதயனின்' பற்றுறுதியை– திடசங்கற்பத்தை– மழுங்கடிக்க முயற்சித்திருக்கின்றது.

மரணங்கள் மலிந்த பூமியில்– கொடூர யுத்தத்துக்கு மத்தியில்– தன்னுடைய பணியைக் கடந்து வந்திருக்கும் உதயனுக்கு இந்த இழப்புக்கள், துன்பங்கள், கஷ்டங்கள் ஒன்றும் புதியவை அல்ல.

உதயனின் கடந்த காலத்தை எடுத்து நோக்குபவர்களுக்கு ஒரு விடயம் நன்கு தெளிவாகப் புரியும்; தெரியும்; புலப்படும். ஈழத் தமிழர்களின் கருத்தியலைப் பிரதிபலித்துவரும் உதய னுக்கு அவன் சார்ந்த மக்களைப் போன்றே அனுபவங்கள் கிட்டின.

யுத்த சன்னதத்தில் தமிழ் மக்கள் குப்புற வீழ்ந்த போதும் மக் கள் மத்தியில் அவர்கள் குரலாக ஊடாடிய உதயனும் குப்புற வீழ்ந்தான். போர் வடுக்களை– யுத்த அழிவுகளை– இழப்புக் களை– துயரங்களைச் சுமந்தான். ஆனால் தனது தமிழ் மக்க ளைப் போலவே அவனும் யுத்த அச்சுறுத்தல் கண்டு துவண்டு விடவில்லை; அதற்கு அடங்கிவிடவில்லை. தமது மக்களைப் போலவே அவனும் சளைக்காமல் அதே சந்தோசத்தோடும், உத்வேகத்தோடும், உறுதியோடும் எழுந்து நின்றான். புத்து யிர்ப்புப் பெற்றான். புது எழுச்சி கொண்டான். அதே வீரத் தோடு– வீறாப்போடு– வீச்சோடு– விவேகத்தோடு– தமிழர் தம் நியாயத்தையும் அவர்களின் தேசியத்தின் உரிமையையும் முரசறைந்தான். தமிழரின் உரிமைக்குரலை உலகெங்கும் முழங் கினான்.

அந்தச் சரித்திரச் சக்கரம் தொடர்ந்து சுழல்கின்றது. இப்போது தமிழர் தம் வாழ்வில் பெரும் நெருக்கடி. அதனால், தமிழர்க ளோடு ஒன்றுபட்டு ஐக்கியப்பட்டு விட்ட உதயனுக்கும் நெருக் கடி. இந்த அரசியல், பாதுகாப்பு, கள இக்கட்டைத் தமிழர் சமூகம் எவ்வாறு வெற்றிகொண்டு கடக்கப் போகின்றதோ அதேபோன்று உதயனும் கடப்பான். புதுமெருகு பெறுவான். புத்தூக்கம் கொள்வான்.

உதயனின் உயிர்ப்பின் நோக்கமும், அவனின் இயக்கத்தின் வீச்சும், செயற்பாட்டின் தாற்பரியமும், கொள்கைப் போக்கின் இலக்கும் உயர்ந்தவை. கிளை பரப்பி இயங்கும் அதன் விசா லப் பருமன் பரந்தது. தனிமனித அழிப்புக்கள், அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் போன்றவை மூலம் அவனின் செயற்பாட்டிலும் இயக்கத்திலும் தடங்கல் ஏற்படலாம். ஆனால் அவன் துவண்டு விடமாட்டான். துவளமாட்டான்.

தமிழ் மக்களின் நியாய இலக்கு எதுவோ அதற்காக 'உதயன்' குரல் எழுப்பும் காலம் வரை– தமிழ் மக்களின் இதயத்தில் அவனுக்கு உயர்ந்த ஆதரவு இடம் இருக்கும்வரை– இத்தகைய வெறியர்களின் தாக்குதல்கள் அவனுக்கு தாங்க முடியாத இழப் புக்கள் அல்ல.

அத்தோடு அடக்குமுறைக்கும், அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் ஊடகப் பணியைத் துணிந்து முன்னெடுக்கும் ஊடகவியலா ளர்களுக்கு முன்மாதிரியாக உதயன் அணியினர் திகழ்வர் என் பதும் திண்ணம்.

*(உதயன் அலுவலகத்தில் ஆயுதாரிகள் நிகழ்த்திய வெறியாட்டத்தில் இரண்டு பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட பின்னர் 04.05. 2006இல் வெளியான உதயனின் ஆசிரிய தலையங்கத்தின் மறுபிரசுரம்)*

# எதிர்ப்புக்குள்ளும் சடலங்கள் எரிப்பு

**முல்லைத்தீவு,மே 4**

**இளைஞர்களுக்கு எதிர்ப் புக்கு மத்தியிலும், கேப்பாப் பிலவு, தனிமைப்படுத்தல் நிலையத்தில் உயிரிழந்தவர்க ளின் சடலங்கள் நீதவானின் அனுமதியுடன் களிக்காட்டில் எரியூட்டப் பட்டன.**



கொழும்பைச் சேர்ந்த 80 அகவையுடைய வேலு சின் னத்தம்பி, 81 அகவையுடைய பி.ஜி.மார்டீன் ஆகிய இருவ ருமே கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்தனர். இவர்களின் மாதிரிகள் கொரோனா வைரஸ் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக் கப்பட்டிருந்தன. இருவருக்கும் கொரோனா தொற்று இல்லை என்று மருத்துவ அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த சட லங்களை மாவடிப்பிலவு இந்து மயானத்தில் தகனம் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டது. முல்லைத்தீவு வைத்தி யசாலை வளாகத்திலிருந்து ஒருவரது சடலம் தகனம் செய் வதற்கான வாகனத்தில் ஏற் றப்பட்ட நிலையில், வைத்திய சாலைக்கு முன்னால் ஒன்று கூடிய பிரதேச இளைஞர்கள் சடலத்தை மாவடிப்பிலவு இந்து மயானத்தில் தகனம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரி வித்தனர்.

நாட்டில் கொரோனாத் தொற் றுப் பரவி வரும் சூழலில், எந்த வொரு பாதுகாப்பும் இன்றி சடலத்தைத் தகனம் செய்ய முற்பட்ட வேளையிலேயே அவர்களால் எதிர்ப்பு வெளியி டப்பட்டது. அதேவேளை வவு னியாவிலுள்ள மின் தகனம் செய்யும் மயானத்தில் சடலங் களைத் தகனம் செய்யுமாறு, பிரதேச இளைஞர்களால் கோரிக்கை விடப்பட்டது.

அதனையடுத்து வவுனியா வில் சடலங்களை மின்தக னம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அங் குள்ள மின்தகனம் செய்யும் இயந்திரம் பழுதடைந்துள்ளது என்று வவுனியாவிலிருந்து உரியவர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டது.

முள்ளியவளை பொலிஸார் இது தொடர்பான நிலைப் பாட்டை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற பதில் நீதி பதியின்கவனத்துக்குஅறிக்கை சமர்ப்பித்தனர். அந்த அறிக் கையில் முள்ளியவளைப் பகுதியில் உள்ள பொதுக் காடு ஒன்றில் சடலங்களை எரி யூட்ட தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

களிக்காடு என்ற காட்டுப்பகுதி யில் இருவரின் உடலங்களை யும் தகனம் செய்வதற்கு பதில் நீதிபதி உத்தரவு பிறப்பித் துள்ளதைத் தொடர்ந்து நேற்று முன் தினம் நள்ளிரவு 11.45 மணியளவில் படை யினர் மற்றும் பொலிஸாரின் பாதுகாப்புடன் மாவட்ட வைத் தியசாலைப்பணிப்பாளர், சுகா தார வைத்திய அதிகாரி, கிர மசேவையாளர், பிரதேச சபை உறுப்பினர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குமாரபுரம் இளைஞர்கள், ஊடகவியா ளர்கள் முன்னிலையிலும் இருவரின் உடலங்கள் தகனம் செய்யப்பட்டன. (க-19,246)

ரணில் அணி திடீர் 'பல்டி'!

## மஹிந்தவின் கூட்டத்தை புறக்கணிக்க முடிவு

கொழும்பு, மே 4

பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் அலரிமா ளிகையில் இன்று நடைபெறவுள்ள கூட்டத்தைப் புறக்கணிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க தலைமை யிலான ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது.

நெருக்கடியான சூழ்நிலையில்கூட கட்சி அரசியலை முன்னெடுப்பதற்கு ராஜபக்ச தரப்பு முயற்சிப்பதா லேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது என ஐ.தே.க. நேற்று விடுத்துள்ள விசேட அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட் டுள்ளது. கொவிட் 19 விவகாரமானது தேசிய பிரச் சினையாகும். இதக் காரணமாகவே கட்சி அரசியலை விடுத்து, பிரதமரின் அழைப்பை ஏற்று கூட்டத்தில் பங்கேற்க ஐக்கிய தேசியக்கட்சி முடிவெ டுத்திருந்தது. ஆனால், இந்த கலந்துரையாடலுக்கு அனைத்து முன்னாள் எம்.பிக்களும், அரசியல் கட்சிகளின் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். இத்தகைய கலந்துரையாடல் பயனுள்ளதாக அமையாது என் றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், தேசியப் பிரச்சினையின்போது கட்சி அர சியலை நடத்தக்கூடாது எனவும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த கூட்டத்தை புறக்கணித்தாலும், கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்காக அரசால் முன்னெ டுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங் கப்படும் என தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக்கட்சி, அரசமைப்பை மீறாத வகையிலேயே பணிகள் இடம் பெறுவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது. (அ-44)

# தேர்தலை நடத்தவே கூட்டம்!

*பிரதமர் மஹிந்த உறுதி*

கொழும்பு, மே 4

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்ப டுத்திய முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர்களுடனான கூட்டம் இன்று திங் கட்கிழமை காலை 10 மணிக்குத் திட்ட மிட்டபடி அலரிமாளிகையின் பிரதான மண்டபத்தில் நடைபெறும். எனது அழைப்புக்கிணங்க இதில் பங்கேற்க விரும்புபவர்கள் சமூகமளிக்கலாம். கூட்டத்தைப் புறக்கணிக்க விரும்புப வர்கள் புறக்கணிக்கலாம். இது தொடர் பில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

'கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக்கூட்டுவது தொடர்பில் இந்தக் கூட் டத்தில் கவனம் செலுத்த மாட்டேன். நாடா ளுமன்றத் தேர்தலை விரைவில் நடத் துவது குறித்தே இங்கு கவனம் செலுத்தப் படும்' எனவும் அவர் திட்டவட்டமாகக் கூறினார். பிரதமர் மஹிந்தவின் விசேட கூட்டத்துக்கான அழைப்பிதழ்கள் அனைத்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதமர் அலுவல கத்தால் அனுப்பப்பட்டுள்ளன. (ஒ,5,22)

## பெண் உத்தியோகத்தர் கிணற்றில் வீழ்ந்து சாவு

வவுனியா, மே 4

கிணறு ஒன்றில் வீழ்ந்த நிலையில் பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். இந்தச் சம்பவம் வவுனியா செட்டிக்குளம் துடரிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

செட்டிக்குளம் பிரதேச சபையில் பணியாற்றும் திருக்கேதீஸ்வரநாதன் கலைவாணி (வயது 21) என்ற பெண்ணே சாவடைந்துள்ளார். கிணற்றில் விழுந்ததை அவதானித்த உறவினர்கள் அயலவர்களின் உதவியுடன் அவரை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும் அவர் சிகிச்சை பலனின்றி சாவடைந்துள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிக்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ப-110)

# யாழ்.மாநகர உறுப்பினர் வீடு புகுந்து தாக்கினார்

### பொலிஸில் முறைப்பாடு



யாழ்ப்பாணம், மே 4

**யாழ்ப்பாண மாநகர சபையின் ஈ.பி.டி.பி. உறுப்பினர் இரா. செல்வவடிவேல், தனது மகனுடன் சென்று வீடொன்றுக்குள் புகுந்து அடாவடியில் ஈடுபட்டார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**

அந்த வீட்டிலுள்ள கோழிப்பண்ணையை அகற்றாவிடின் ஆவா குழுவைக் கொண்டு அழிக்க வேண்டி வரும் என்று எச்சரித்துள்ளார் என்றும் மாநகர சபை உறுப்பினர் இரா.செல்வவடிவேல், பண்ணை உரிமையாளரைத் தாக்கி உள்ளார் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் பிரப்பங்குளம் வீதியிலுள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் மாலை 5.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. "மாநகர சபை உறுப்பினர் இரா.செல்வவடிவேல் எமது வீதிக்கு 3 ஒழுங்கைகள் தொலைவில் இருக்கிறார். அவர் தனது மனைவி, மகனுடன் நேற்றுமுன்தினம் மாலை எமது வீட்டுக்குள் சண்டியர் போன்று புகுந்தார். எமது கோழிப் பண்ணையால் சுகாதாரச் சீர்கேடு என்றும் அதனை உடனடியாக அகற்றுமாறும் அச்சுறுத்தும் பாணியில் தெரிவித்தார். நாம் இந்தக் கோழிப்பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் உரிய அனுமதி பெற்று கடந்த 4 ஆண்டுகளாக நடத்தி வருகின்றோம் என்று அவரிடம் கூறினோம். அதனை ஏற்கமறுத்த அவர், தான் ஈ.பி.டி.பியைச் சார்ந்தவர் என்றும் தனது மகனிடம் ஆவா குழு உள்ளது என்றும் மிரட்டி என்னை அடித்தார். தகாத வார்த்தைகளால் ஏசினார். அவரது அடாவடி தொடர்பில் பொலிஸ் அவசர சேவைக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸார் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்" என்று கோழிப்பண்ணை உரிமையாளர் தெரிவித்தார்.

"நான் அங்கு சென்று கோழிப்பண்ணை நாற்றம் தொடர்பில் கேட்டேன். அந்தப் பண்ணை பதிவு செய்யப்படவில்லை. கோழிப்பண்ணை உரிமையாளர் என் மீது கல்லால் எறிந்தார். அதனால்தான் அவரைத் தாக்கினேன்" என்று மாநகர சபை உறுப்பினர் இரா.செல்வவடிவேல் தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (கு-37)

## காணாமல்போன சிறுவன் நேற்று சடலமாக மீட்பு

கிளிநொச்சி, மே 4

கிளிநொச்சி, பளையில் வீட்டில் இருந்து காணாமல்போன சிறுவன் களப்பு பகுதியிலிருந்து நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டான்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லையடி பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய இரவீந்திரன் அனோஜ் என்ற சிறுவன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்தான். அண்மையில் வெளியாகிய சாதாரண தரப் பரீட்சையில் சித்தி அடையவில்லை என உறவினர்கள் நச்சரித்தபோது, அதனால் விரக்தி அடைந்த சிறுவன் வீட்டை விட்டு வெளியே சென்றான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவன் ஒரு வாரமாக தேடப்பட்டு வந்த நிலையில் நேற்று களப்பு பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டான். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஐ)

## மேல் மாகாணத்திலிருந்தும் 370 பேர் ஊர் திரும்பினர்

கொழும்பு, மே 4

கொவிட் 19 தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால், தமது இருப்பிடங்களுக்குச் செல்ல முடியாமல் மேல் மாகாணத்தில் சிக்கியுள்ளவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கும் பணிகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டன.

அதில் முதற்கட்டமாக மேல் மாகாணத்தின் களனி பொலிஸ் பிரிவில் இவ்வாறு சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாமல் இருந்த 370 பேர் பொலிஸ் பாதுகாப்புடன் அனுப்பப்பட்டனர்.

மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் வழி நடத்தலில், பேலியகொடை பகுதியில் உள்ள விஜயகுமாரதுங்க மைதானத்தில் ஒன்று சேர்க்கப்பட்ட இந்த 370 பேரும், காலை உணவு வழங்கப்பட்டு மருத்துவ பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்ட பின்னர், தொற்று நீக்கல் செய்யப்பட்டு இ.போ.ச. பஸ்களில் அவரவர் பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டனர் என மேல் மாகாணத்தின் வடக்கு பிராந்திய உயர் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். (ப)

## ஊரடங்கை மீறினர் என்று இதுவரை 44,231 பேர் கைது

### 11,460 வாகனங்கள் பறிமுதல்

கொழும்பு, மே 4

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்துக்கு மாறாகச் செயற்பட்டனர் என்று இதுவரையில் 44 ஆயிரத்து 231 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 11 ஆயிரத்து 460 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

வைரஸ் தொற்றால் ஏற்படும் நெருக்கடி நிலைமையை கருத்தில் கொண்டு, கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்காக கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் நாடு பூராகவும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்போது இடர் வலயங்களைத் தவிர ஏனைய பகுதிகளில் ஊரடங்கு தளர்த்தப்பட்டு மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போதும் நாடுபூராக ஊரடங்கு நடைமுறையில் இருப்பதுடன் , இடர் வலயங்களைத் தவிர ஏனையப் பகுதிகளுக்கான ஊரடங்கு திங்கட்கிழமை தளர்த்தப்பட்டு எதிர்வரும் புதன்கிழமை ஆறாம் திகதி மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த நிலையில் ஊரடங்கு உத்தரவை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை ஆறு மணி முதல் பிற்பகல் 12 மணிவரையான 6 மணித்தியாலயத்திற்குள் மாத்திரம் 204 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 78 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 44 நாள்கள் கடந்துள்ள நிலையில் இதுவரை 44 ஆயிரத்து 231 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 11 ஆயிரத்து 460 வாகனங்கள் பறிமுதல்செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது. (ப)

## 24 மணிக்குள் 32 பேர் கைது

மட்டக்களப்பு,மே 4

மட்டக்களப்பில் ஊரடங்கை மீறியமை மற்றும் கசிப்பு, கஞ்சா, ஹெரோயினுடன் கடந்த 24 மணித்தியாலங்களில் 32 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி, வாழைச்சேனை, வவுணதீவு, கொக்கட்டிச்சோலைப் பொலிஸ் பிரிவுகளில் இவ்வாறு கைதாகியுள்ளனர்.

ஊரடங்குச் சட்டத்தை மீறி வீதியில் நடமாடிய 21பேர், கசிப்புடன் தொடர்புடைய 8 பேர், கஞ்சா மற்றும் ஹெரோயினுடன் 3 பேர் உட்பட 32 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் சனிக்கிழமை காலை 6 மணி வரையிலான 24 மணித்தியாலங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (க-150)

## திருமலையில் தொற்று நீக்கல்

திருகோணமலை, மே 4

கோரோனா வைரஸ் தொற்று நீக்கும் செயற்பாடுகள் திருகோணமலை நகரப்பகுதிகளில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலை காரணமாக ,கொவிட்19 தடுப்பு முற்காப்பு நடவடிக்கையாகவே கிருமி நீக்கும் செயற்பாடுகள் திருகோணமலை நகரில் மேற்கொள்ளப்பட்டன. வித்தியாலய வீதி, சாரதா வீதி, இராஜவரோதயம் வீதி, கஸ்கிசன் வீதி, சிவன் வீதி உள்ளிட்ட வீதிகளில் இவ்வாறு தொற்று நீக்கி மருந்துகள் விசிறப்பட்டது. சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, மாவட்ட சுகாதாரப் பிரிவினரால் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ப-40)

# பருப்பு, ரின் மீனுக்கான அதிக பட்ச விலை நீக்கம்

கொழும்பு, மே 4

மைசூர் பருப்பு மற்றும் தகரப் பேணியில் அடைக்கப்பட்ட மீன் ஆகியவற்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை நீக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 17 ஆம் திகதி முதல் மைசூர் பருப்பு ஒரு கிலோகிராமின் விலை 65 ரூபாவாகவும் 425 கிராம் எடை கொண்ட தகரப் பேணியில் அடைக்கப்பட்ட மீனின் விலை 100 ரூபாவாகவும், அதிகபட்ச சில்லறை விலையாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## 2022 வரை கொரோனா நீடிக்கும்

கொழும்பு, மே 4

கொரோனா வைரஸ் தொற்றானது எதிர்வரும் 2022ஆம் ஆண்டு வரை நீடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள பிரபல பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் குழாம் ஒன்று இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

இந்த வைரஸானது 18 முதல் 24 மாதங்கள் வரை நீடித்திருக்கக்கூடியது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## புறப்பட்ட விமானங்கள்

கொழும்பு, மே 4

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக லண்டன் மற்றும் ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் சிக்கியுள்ள இலங்கை மாணவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்காகச் சிறப்பு விமானங்களைப் பயன்படுத்துவதற்கு இலங்கை எயார்லைன்ஸ் நிறுவனம் முடிவுசெய்துள்ளது.

அதன்படி நான்கு விமானங்கள் இதற்காகப் பயன்படுத்தப்படவுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான ஒரு விமானம் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தை நோக்கி புறப்பட்டது. அத்தோடு இன்று திங்கட்கிழமை மற்றும் நாளை செவ்வாய்க்கிழமையும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானங்கள் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தை நோக்கி புறப்படவுள்ளன. அதே நேரத்தில் அங்கிருந்து திருப்பி அனுப்பப்படும் விமானங்கள் மே 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆஸ்திரேலியாவின் மெல்போர் நோக்கிப் புறப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ப)



## நாட்டுக்கு ஆசி வேண்டி அனுராதபுரத்தில் வழிபாடு

கொழும்பு, மே 4

நாட்டுக்கும் மக்களுக்கும் ஆசிவேண்டி வரலாற்று முக்கியத்துவமிக்க ஜயஸ்ரீ மகா போதியில் நேற்றுமுன்தினம் வழிபாடுகள் இடம்பெற்றன. இந்த வழிபாட்டில் ஜனாதிபதியும் பங்கேற்றார்.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

அநுராதபுரம் புனிதபூமிக்கு வருகைதந்த ஜனாதிபதி அடமஸ்தானாதிபதி கலாநிதி சங்கைக்குரிய பல்லேகம சிறினிவாச நாயக்க தேரரை சந்தித்து ஆசிகளைப் பெற்றுக்கொண்டார்.

ருவன்வெலி மகா சேய வளாகத்தில் இடம்பெற்ற பூஜையிலும் கலந்துகொண்ட ஜனாதிபதி சமயக் கிரியைகளில் ஈடுபட்டு நாட்டுக்கும் மக்களுக்கும் ஆசி வேண்டி பிரார்த்தித் தார்.

அங்கு விசேட பிரித் பாராயண நிகழ்வொன்றும் இடம்பெற்றது. ருவன்வெலி சேய விகாராதிபதி சங்கைக்குரிய பல்லேகம ஹேமரத்ன நாயக தேரரை சந்தித்த ஜனாதிபதி தேரருடன் கலந்துரையாடினார் - என்றுள்ளது. (ம)

## வன்னேரிக்குளம் காணி; அறிக்கை சமர்ப்பிக்குக!

### கோருகிறது ஜனாதிபதி செயலகம்

கிளிநொச்சி, மே 4

கிளிநொச்சி மாவட்டத்தில் வன்னேரிக்குளத்தில் மக்கள் காணிகளை வனவளத் திணைக்களம் அபகரித்துள்ள விடயம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திடம் ஜனாதிபதி செயலகம் கோரியுள்ளது.

மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளில் போர் காரணமாக நீண்ட காலம் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படவில்லை. அந்தப் பகுதிகளில் காடுகள் வளர்ந்துள்ளன. இதன் காரணமாக வனவளத் திணைக்களம் அந்தப் பகுதியை உரிமை கோருகின்றது.

அந்தக் காணி விவசாயிகளுக்குரியது என்பது நடமாடும் சேவையில் உறுதி செய்யப்பட்டபோதும் வனவளத் திணைக்களம் அந்தப் பகுதியை விடுவிக்க மறுத்து வருகின்றது.

இவ்வாறான நிலைமையில் அந்தக் காணி தொடர்பில் உண்மை நிலைமையையும் அதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் அறியத்தருமாறு ஜனாதிபதி செயலகம் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திடம் கோரியுள்ளது. (ஒ.5.105)



## வெசாக்கை வீட்டிலிருந்தே இம்முறை கொண்டாடுங்கள்

### பிரதமரும் அறிவிப்பு

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள சவால்களை மக்கள் கருத்தில் கொண்டு வீட்டில் இருந்து வெசாக் பண்டிகையைக் கொண்டாடி தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ச கோரிக்கை விடுத்துள்ளார். வெசாக் பண்டிகை தொடர்பில் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளார்.

மத அனுஷ்டானங்களைப் பாதுகாப்பான முறையில் பின்பற்றி வெசாக் பண்டிகையினை வீட்டில் இருந்து கொண்டாடுவது அவசியமாக்கப்பட்டுள்ளது. வெசாக் பண்டிகை தினத்தன்று வீடுகளில் விளக்கேற்றுவதற்கு தேவையான மூலப் பொருள்களை தடையின்றி விநியோகிப்ப தற்கான நடவடிக்கைகள் முன்னெடு கப்பட்டுள்ளன. சுகாதார, பாதுகாப்பு துறையினரது செயற்பாடுகள் அளப்பரியன. வெசாக் தினத்தன்று சமய நிகழ்வுகளுக்கு அனைத்து இலத்திரனியல் ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாகும் என்று அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். வெசாக் பண்டிகையை வீட்டிலிருந்து கொண்டாடுமாறு ஏற்கனவே சுகாதார அமைச்சு அறிவித்திருந்த நிலையில், பிரதமரும் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார். (ப)

## தமிழ்க் கூட்டமைப்பு தோல்விப் பாதையில்!

### இ.தொ.கா. கொக்கரிப்பு

கொழும்பு, மே 4

தோல்விப் பயத்தாலேயே பொதுத்தேர்தலை ஒத்திவைக்கவேண்டும் என்ற பரப்புரையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்து வருகின்றது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆளுங்கட்சி வெற்றிபெறும் எனவும் இ.தொ.காவின் உப தலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொதுத்தேர்தல் தொடர்பில் நீதிமன்றம் செல்லப்போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ளமை வியப்புக்குரிய விடயமாகும். நாட்டில் 70 வருடங்களுக்கு மேலாக இனப்பிரச்சினை இருந்துவருகின்றது.

கடந்த ஆட்சியின்போது நாட்டில் அரசமைப்பை மாற்றியமைப்பதற்கான வல்லமை இருந்தும் அதனைக் கூட்டமைப்பு செய்யவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இன்று தோல்விப்பாதையில் சென்றுக் கொண்டிருக்கிறது.

கூட்டமைப்புக்கு எதிரான சக்திகள் அங்கு பலமடைந்து கொண்டிருக்கின்றன. எனவேதான் தோல்வியில் இருந்து தப்புவதற்காக தேர்தலை பிற்போடும் முயற்சியில் இறங்கியிருக்கக் கூடும் என்றார். (ஒ.5,44)

# பி.சி.ஆர். சோதனை உரிய பாதுகாப்புடனே முன்னெடுப்பு

## யாழ். மருத்துவ பீடத்தில் நடப்பது என்ன?

டிலீப்அமுதன்

மருத்துவபீட பீடாதிபதி ரவிராஜ் கொரோனா நிலைமை தொடர்பிலும், மருத்துவபீடத்தில் முன்னெடுக்கப்படும் சோதனை தொடர்பிலும் சில விடயங்களை 'உதயனுடன்' பகிர்ந்து கொண்டார்.



**கேள்வி:** யாழ்ப்பாணத்தில் கொரோனா தொடர்பான நிலைமை எவ்வாறுள்ளது? ஊரடங்கு தளர்த்தப்படும்போது சமூக இடைவெளி உரிய வகையில் பேணப்படவில்லை. இது எத்தகைய ஆபத்தை ஏற்படுத்தும்?

**பதில் :** கடந்த இரண்டு மூன்று வாரங்களாக நாம் முன்னெடுக்கும் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில், யாழ்ப் பாணத்தில் சமூக ரீதியான தொற்று அவதானிக்கப்படவில்லை. சமூக ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை முடிவுகளில் கொரோனா தொற்று இல்லை என்ற பெறுபேறே கிடைத்துள்ளது. அதை வைத்து மாத்திரம் நாம் முடிவுக்கு வரமுடியாது.

எங்களது பிரதேசங்களில் நோய் அறிகுறிகள் தென்படாமல் கொரோனா நோய்க் காவிகளாக பலர் இருக்கக் கூடும். அவர்களால் கொரோனா பரவக்கூடிய சாத்தியக் கூறுகள் இன்னமும் இருப்பதனால் அவதானமாக இருக்கவேண்டும். ஊரடங்கு தளர்த்தப்படும் போதும் சமூக இடைவெளி பேணப்பட வேண்டும். இருவருக்கு இடையில் ஒரு மீற்றர் இடைவெளி ஆகக் குறைந்தது கட்டாயம் இருக்க வேண்டும். சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை எவரும் உதாசீனம் செய்யக்கூடாது.

**கேள்வி** மருத்துவபீடத்தில் தற்போதுள்ள நிலைமையில் ஆகக் கூடுதலாக எவ்வளவு பரிசோதனைகளை ஒரு நாளில் எந்தவொரு இடரும் இல்லாமல் மேற்கொள்ள முடியும்.

**பதில் :** எங்களால் 50 பரிசோதனைகளை ஒரு நாளில் மேற்கொள்ள முடியும். சோதனைகளை முன்னெடுக்கும் குழுவினர் இதனைத் தெரியப்படுத்தியுள்ளனர். கூடுதலான சோதனைகள் தேவைப்பட்டால் செய்ய முடியும். ஆனால் சோதனையை முன்னெடுப்பவர்களுக்கும், அதனைச் செய்யும் இயந்திரத்துக்கும் குறிப்பிட்டளவு நேரம் ஓய்வு தேவை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**கேள்வி:** மருத்துவபீட ஆய்வு கூடத்தின் பாதுகாப்புத் தொடர்பில் நீங்கள் திருப்தியடைகின்றீர்களா?

**பதில் :** இந்தப் பரிசோதனையை எமது ஆய்வுகூடத்தில் முன்னெடுக்கத் தொடங்கியதிலிருந்து பலரது ஆலோசனைகளை நாம் பெற்றுக் கொள்கின்றோம். இலங்கையில் தொற்றுத் தொடர்பான விடயங்களில் நிபுணத்துவம் பெற்ற கொழும்பு மற்றும் பெரதெனியா பல்கலைக்கழக பேராசிரியர்கள், வைரஸ் தொடர்பான நிபுணர்கள் மற்றும் சுகாதாரத் துறை உயர் அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடியே நாம் எமது ஆய்வு கூடத்தில் சோதனை செய்கின்றோம்.

ஆய்வுகூடத்திலும், சுற்றாடலிலும் எவ்வாறான முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட விடயங்களையும் கவனத்தில் எடுத்தே செயற்படுகின்றோம். எமது பீடத்திலுள்ள வெவ்வேறு பகுதிகளையும் சேர்ந்த மாணவர்கள், ஊழியர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பான அறிவுரைகள் கூட எமக்கு வழங்கப்பட்டுள்ளன. அதை நாம் மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வழங்கியுள்ளோம். எங்களால் உச்சக்கட்ட முற்பாதுகாப்பு ஏற்பாடுகள் கைக் கொள்ளப்பட்டே சோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதனை விட ஆய்வு கூடங்கள் ஊடாக கொரோனா பரவும் தன்மை மிகக் குறைவு.

**கடந்த ஒரு மாதமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் கொரோனா தொற்றுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்கும் குழுவினர்.**

1. மருத்துவர் த.சத்தியமூர்த்தி (பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை)
2. மருத்துவர் எஸ்.ரவிராஜ் (பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம்)
3. மருத்துவர் ஏ.முருகானந்தன் (மூத்த விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம்)
4. மருத்துவர் திருமதி ரஜந்தி ராமச்சந்திரன் (நுண்ணுயியல் துறை நிபுணர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை)
5. மருத்துவர் திருமதி கே.முருகானந்தன் (மூத்த விரிவுரையாளர், நுண்ணுயியல் பீடம், மருத்துவபீடம்)
6. மார்க் மிதுலன் (மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை)
7. எஸ்.சிறிஜெயபவன் (மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை)
8. ஆர்.திறீஸ்வரன் (மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை)
9. எஸ்.ஆர்த்திகன் (விரிவுரையாளர், விலங்கியல்துறை, பல்கலைக்கழக விஞ்ஞானபீடம்)
10. பேராசிரியர் எஸ்.கண்ணதாசன் (ஒட்டுண்ணிநோய் பீடம், பல்கலைக்கழக மருத்துவபீடம்)

இதன் பின்னர் மருத்துவபீடத்தில் மேற்கொள்ளப்படும் சோதனை தொடர்பிலும் அதனோடு இணைந்த விடயங்கள் தொடர்பிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மூத்த விரிவுரையாளர் மருத்துவர் ஏ.முருகானந்தன் மற்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை நுண்ணுயியல்துறை நிபுணர் மருத்துவர் திருமதி ரஜந்தி ராமசந்திரன் ஆகியோர் 'உதயனுடன்' விடயங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

மருத்துவர் ஏ.முருகானந்தன் ஆரம்பத்தில் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.



**கேள்வி:** யாழ்.போதனா மருத்துவமனையில் பிசிஆர் சோதனை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மருத்துவபீடம் தொடர்ந்தும் சோதனையை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏதாவது உள்ளதா?

**பதில் :** கொரோனா தொற்றுச் சோதனை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேற்கொள்வதற்கே முன்னர் திட்டமிட்டிருந்தோம். அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குரிய சில குறைபாடுகள், அதற்குரிய கருவிகள் இல்லாமல் இருந்தன. அதனால் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ஆரம்பிக்குமாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, மருத்துவபீட பீடாதீபதி எஸ்.ரவிராஜிடம் வேண்டுகோள் விடுத்தார். எமது பீடாதிபதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரியிடம் அனுமதியைப் பெற்றார். அதன் பின்னர் மருத்துவ பீடத்தில் சோதனைகள் ஆரம்பமாகின.

மருத்துவபீடத்தில் சோதனைகளை முன்னெடுக்கும் அதே நேரத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலுள்ள பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்து அங்கும் ஆரம்பிக்கும் திட்டத்தையே வைத்திருந்தோம். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு இப்போது சகல கருவிகளும் வந்துவிட்டன. இன்னும் பரீட்சார்த்த பரிசோதனை அங்கு செய்யவில்லை. விரைவில் அதனைச் செய்வோம். கொரோனா சோதனைகள் அதிகரிக்க வேண்டிய தேவை இருப்பதால், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் ஒரே நேரத்தில் பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பரிசோதனைகளை ஆரம்பித்தாலும் இங்கு அது தொடரும் என்பதுதான் இதுவரையான திட்டம்.

**கேள்வி:** பிசிஆர் சோதனைக்குரிய சோதனைக்குத் தேவையான பொருள்கள் (ரெஸ்டிங் கிட்ஸ்) தட்டுப்பாடில்லாமல் கிடைக்கின்றதா?

**பதில் :** சுகாதார அமைச்சு நேரடியாக சோதனைக்குத் தேவையான பொருள்களை வழங்கும் நடைமுறை இருக்கவில்லை. எங்களையே விநியோகத்தரிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ளுமாறு பணித்தார்கள். மருத்துவபீடத்தில் உள்ள பிசிஆர் கருவிக்குப் பொருத்தமான சோதனைக்குத் தேவையான பொருள்களை நாங்கள் கொள்வனவு செய்தோம். இலங்கையில் 5 தொடக்கம் 6 வித்தியாசமான பிசிஆர் கருவிகள் இருக்கின்றன. கருவிகள் இடையே வித்தியாசம் உண்டு. சகல கருவிகளும் ஒரே மாதிரியான வாசிப்பைத்தான் தரும். பிசிஆர் கருவிகளின் வகைகளைப் பொறுத்து (பிராண்ட் அன்ட் மொடரேட்) சில கருவிகளில் சோதனைக்குத் தேவையான சில பொருள்களைப் பயன்படுத்த முடியாது.

**கேள்வி:** பிசிஆர் பரிசோதனையை மருத்துவ பீடத்தில் முன்னெடுப்ப தில் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?

**பதில் :** ஆளணி வளம் எங்களுக்குப் பெரும் சவாலாக இருந்தது. காரணம் இந்தச் சோதனையை மேற்கொள்ளவதற்கு மூலக்கூற்று உயிரியல் தொழில்நுட்பம் அவசியம். மூலக்கூற்று உயிரியல் துறையில் விற்பனர்களாக உள்ளவர்கள்தான் இதற்குத் தேவை. ஒரு தடவை பரிசோதனை செய்து முடிப்பதற்கு எங்களுக்கு 5 தொடக்கம் 6 மணித்தியாலங்கள் வரையில் செல்லும். மூலக்கூற்று உயிரியல் அறிவும், அனுபவமும் இல்லாதவர்களால் இதனைச் செய்ய முடியாது. இலங்கையில் உள்ள ஏனைய வைரஸ் கூடங்கள் (வைரோலஜி லாப்) முன்னரே இயங்கிக் கொண்டிருந்தன. அதனால் அவர்களுக்குரிய ஆளணிக் கட்டமைப்பு இருந்தது.

ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் கல்வித்துறை சார் பீடமாக இருந்தமையால் அவர்களைப் போன்றதொரு ஆளணிக் கட்டமைப்பைக் கொண்டிருக்கவில்லை. மருத்துவபீடத்தில் சடுதியாக ஆரம்பிக்கும் போது ஆளணியைக் கட்டமைப்பில் சிரமங்களை எதிர்கொண்டோம்.



சோதனைக்கு தேவையான பொருள்

(மறுபக்கம் பார்க்க)

# பி.சி.ஆர். சோதனை உரிய பாதுகாப்புடனே முன்னெடுப்பு



(தொடர்ச்சி)

**கேள்வி:** எப்படி ஆளணிக் கட்டமைப்பை உருவாக்கினீர்கள்?

**பதில் :** நான் 10 வருடங்களாக மூலக்கூற்று உயிரியல் துறையில் பணியாற்றிக் கொண்டிருப்பதால் எனக்கு அனுபவம் இருந்தது. நான் தனித்து இதனைச் செய்ய முடியாது. இந்த வேலையில் பல கூறுகள் இருக்கின்றன.

டெங்குத் தொற்றுக்குரிய பிசிஆர் சோதனை செய்யும் மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவரை மருத்துவமனையிலிருந்து விடுவித்து எங்கள் குழுவுக்குள் உள்வாங்கிக் கொண்டோம். அவருடன் இணைந்து பணியாற்றக் கூடிய மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் இருவரை பின்னர் அடையாளம் கண்டு இவருடன் இணைத்தோம். ஆரம்பத்தில் நானும், மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநரும் ஒவ்வொரு பகுதியில் இருந்து பணிகளை ஆற்றினோம். அவர் தனது பணிகளை, அவருடன் இணைக்கப்பட்ட இரண்டு மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்களுடன் பயிற்சிகளை வழங்கினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட நுண்ணுயியல் துறையில் மூத்த விரிவுரையாளராகப் பணியாற்றும் திருமதி கலாமதி முருகானந்தன் அவர்கள், வைரஸ் தொடர்பான துறையில் முதுமாணி பட்டம் பெற்றவர். அவருடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நுண்ணுயியல் துறையில் நிபுணராகக் கடமையாற்றும் மருத்துவர் திருமதி ரஜந்தி ராமசந்திரனும் இணைந்து இந்தப் பரிசோதனையை பாதுகாப்பாக மேற்கொள்வதற்குரிய அனைத்து படிமுறைகளிலும் வழிநடத்தினார்கள்.

ஆய்வுகூடத்துக்கு வெளியேயான அனைத்துத் தொடர்பாடல்கள் மற்றும் ஏனைய ஒழுங்குகளை மருத்துவபீட பேராசிரியர் எஸ்.கண்ணதாசன் முழுமையாகப் பொறுப்பேற்றார். எனது பகுதியில் பணியாற்றுவதற்கு ஒருவர் தேவைப்பட்டார். அதற்கு மூலக்கூற்று உயிரியலில் பணியாற்றிய எனது மாணவனும், விலங்கியல் துறை விரிவுரையாளராக வும் உள்ள எஸ்.ஆர்த்திகனை இணைத்துக் கொண்டேன். ஏற்கனவே அவருக்குப் பயிற்சியளித்திருந்தமையால் தற்போது கூடிய பயிற்சியளிக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. நானும் ஆர்த்திகனும் ஒரு பகுதியில் பணியாற்ற, மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர் ஒரு பகுதியில் கடமையாற்ற எங்களது குழு வேலை நகர்ந்தது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சோதனை நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்போது இங்கிருந்து யாரை அங்கு அனுப்புவது என்ற பிரச்சினை எழுந்தது. வெகு விரைவாக இதேபோன்றதொரு இன்னொரு குழுவுக்கு பயிற்சியளித்து தயார் செய்வோம் என்ற தீர்மானத்தை எடுத்துள்ளோம். ஏற்கனவே உள்ள மூன்று மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு மேலதிகமாக இருவரை உள்வாங்கி தற்போது பயிற்சியளித்து வருகின்றோம். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சோதனை ஆரம்பித்ததும், மருத்துவ பீடத்திலுள்ள வல்லுநர் குழுவிலிருந்து இருவரை அனுப்பி அவர்களுக்கு பயிற்சியளித்து அங்கும் இன்னொரு குழுவை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம்.

**கேள்வி:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடம் கொவிட் 19 சோதனைக்காக திடீரென ஆரம்பிக்கப்பட்டது. இங்கு உரிய பாதுகாப்பு வசதிகள் உண்டா? ஏதாவது குறைபாடுகள் ஆய்வுகூடத்தில் உண்டா? இதற்கான சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடு என்ன? மருத்துவ பீடத்தில் தனிமைப்படுத்தப்பட்ட இடத்திலா முன்னெடுக்கப்படுகின்றது?

**பதில் :** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கற்பித்தல் நடவடிக்கையும் ஆராய்ச்சி நடவடிக்கையும்தான் முதன்மையானது. இவ்வாறான சோதனை நடவடிக்கைகள் செய்வதில்லை. இதற்கு மேலதிகமாக இங்குள்ள மருத்துவபீட ஆய்வுகூடம் வைரஸ் தொடர்பான ஆய்வு கூடமும் இல்லை. எமது ஆய்வுகூடம் எப்படி வைரஸ் தொடர்பான ஆய்வுகூடமாக மாறியது என்ற கேள்வி எழும். அதனை எப்படி மாற்றினோம் என்பதைத் தெளிவுபடுத்துகின்றேன். யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளப்படும் கொரோனா சோதனை மாதிரிகள் அநுராதபுரத்துக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பெறுபேறுகள் வருவதற்கு மூன்று நாள்கள் செல்கின்றன. இதன் காரணமாக தொற்றுக்குள்ளானவருக்கு சிகிச்சையளிப்பது மாத்திரமல்ல அவரை வைத்திருப்பதால் பரவலடையும் பிரச்சினை என்று பல சிக்கல்கள் இருந்தன. உடனடியாக இங்கு சோதனையை ஆரம்பிக்க வேண்டிய தேவை இருந்தது.

கொரோனா தொற்றுக்குரியவர்கள் கண்டறியப்பட்ட ஏனைய மாவட்டங்கள் சோதனையை தங்கள் மாவட்டங்களிலேயே செய்து கொண்டிருந்தன. விதிவிலக்காக யாழ்ப்பாணம் மட்டும்தான் அநுராதபுரத்தில் தங்கியிருந்தது.

இங்கு ஆரம்பிப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டபோது பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம் ஆகிய இரண்டு விடயங்கள் தொடர்பிலும் கரிசனை செலுத்தப்பட்டது. தொழில்நுட்ப விவகாரத்தை நாங்கள் கையாளலாம்.

பாதுகாப்பு விடயத்துக்கு என்ன செய்யலாம் என்பது பற்றி ஆராய்ந்தோம். ஏற்கனவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற அநுராதபுரம் மற்றும் கண்டியிலுள்ள வைரஸ் தொடர்பான ஆய்வுகூடத்தின் வைரஸ் தொடர்பான வல்லுநருடன் (வைரோலஜிஸ்ட்) தொடர்பு கொண்டோம்.

எங்களிடம் வைரஸ் தொடர்பான நிபுணர் இல்லாத நிலையிலும் சோதனைகளை இங்கு ஆரம்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆகவே மாதிரிகளை பாதுகாப்பாக கையாள்வது தொடர்பில் எங்களுக்கு ஆலோசனை வழங்குமாறு கண்டி மற்றும் அநுராதபுரத்திலுள்ள வைரஸ் தொடர்பான வல்லுநர்களைக் கோரினோம்.

'தாங்கள் வேலை செய்து கொண்டிருக்கும்போது வந்து பார்வையிடக் கூறினார்கள். எப்படியான பாதுகாப்பு முறைமைகளை பின்பற்றுகின்றோம். அதைப் பார்த்த பின்னர் எமது ஆய்வுகூடத்தில், அங்கு பின்பற்றப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா என்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். அதைச் செய்ய முடியும் என்றால் இங்கு பரிசோதனைகளை ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும்' என்று அவர்கள் எங்களுக்குக் கூறினார்கள்.

எங்களது குழு கண்டிக்குச் சென்றது. மாதிரியை ஆய்வுகூடத்துக்கு கொண்டு வருவதிலிருந்து ஒரு நாள் முழுவதும் அவர்களது பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளிட்ட முழு விடயங்களையும் அவதானித்தோம். அதனைப் பார்த்த பின்னர் இங்கு செய்ய முடியும் என்று எங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. பரிசோதனையின் எந்தெந்த இடங்களில் அவதானமாக இருக்கவேண்டும் என்று வைரஸ் தொடர்பான நிபுணர் எங்களுக்கு கூறினார். நாங்கள் இங்கு நோயாளரை கையாளப் போவதில்லை. நோயாளரைக் கையாள்பவர்கள்தான் கவனமாக இருக்கவேண்டும்.

நோயாளியிடம் இருந்து பெறப்படும் மாதிரி மூன்றடுக்குப் பாதுகாப்புடன்தான் இங்கு கொண்டு வரப்படும். அதன் பின்னர் அதைக் கையாள்வதில் நாங்கள் தவறிழைத்தால்தான் பரவுவதற்கான வாய்ப்புண்டு. இதைக் கையாள்வதற்கு ஆய்வு கூடத்தில் சர்வதேச ரீதியில் பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பு அளவுத் திட்டங்கள் பின்பற்றுகின்றோம் என்று மூத்த விரிவுரையாளர் மருத்துவர் ஏ.முருகானந்தன் குறிப்பிட்டார்.

### மருத்துவர் ரஜந்தி ராமசந்திரன்

பரிசோதனை முன்னெடுக்கும் போது மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் துறைசார் மருத்துவர் திருமதி ரஜந்தி ராமசந்திரன் விளக்கமளித்தார்.



பாதுகாப்பு அளவீடுகளை, நோயாளியிடமிருந்து மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளுவதிலிருந்து அதனை அழிக்கும் வரையில் நாங்கள் கருத்தில் எடுக்க வேண்டும்.

நோயாளிகளின் மூக்கிலிருந்து மாதிரிகள் எடுக்கப்படும். அந்த நேரத்தில் நோயாளி இரும அல்லது தும்ம முயற்சிப்பார். மூக்கினுள் இன்னொரு பரீட்சயமில்லாத பொருள் செல்லும்போது எரிச்சலாக இருக்கும். இந்த வேளையில் மாதிரியைப் பெற்றுக் கொள்பவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். மாதிரியை எடுப்பவர் முழுப் பாதுகாப்பு அங்கி அணிந்திருப்பார். ஒருவரிடமிருந்து மாதிரியைப் பெற்ற பின்னர் அதே கையுறையுடன் அடுத்தவரிடம் எடுக்க முடியாது. முதலில் எடுத்தவரிடமிருந்து அடுத்தவருக்கு தொற்றுப் பரவக் கூடாது என்பதற்காகவே கையுறை மாற்றப்படும். மாதிரியை எடுப்பவரே அதனை வைரஸ் கிருமியை ஆய்வுகூடத்துக்கு அனுப்பப் பயன்படுத்தப்படும் திரவ ஊடகத்தில் வைத்து மூடியால் மூடுவார். அதை விட மேலும் இரு பெட்டிகளில் பாதுகாப்பாக வைக்கப்படும். இத்தகைய பொதி செய்யப்படும் மாதிரிகளை சர்வதேச போக்குவரத்தில் கூட கொண்டு செல்ல முடியும். சர்வதேச தரத்தில்தான் இங்கு நாம் பொதி செய்து அதனைக் கொண்டு வருகின்றோம். மருத்துவபீடத்துக்கு அதன் வழமையான வாசல் ஊடாக இவை அம்புலன்ஸில் கொண்டு வரப்படுவதில்லை. மருத்துவபீடத்தின் பின்பக்கமாக உள்ள வாசல் ஊடாகவே கொண்டு வரப்படுகின்றது. முன் வாசல் ஊடாகக் கொண்டு வரப்படுவதில் பாதகம் ஏதும் இல்லை என்ற போதும் தேவையில்லாத பீதியை ஏற்படுத்த விரும்பவில்லை. கொண்டு வரப்படும் மாதிரிகளை வைப்பதற்கு மருத்துவ பீடத்தில் தனித்துவமான பெட்டி வைக்கப்பட்டுள்ளது. அதில் வைக்கப்படும்.

#### பிரித்தெடுப்பு

கொண்டு வரப்படும் மாதிரிகளிலிருந்து இறைபோ நியூக்கிளிக் அமிலம் (ஆர் என்ஏ) பிரித்தெடுக்கப்படும். பிரித்தெடுத்தல் செயன்முறையை மேற்கொள்ளச் செல்பவர்கள் முழுமையான பாதுகாப்பு உடை (பி.பி.ஈ) அணிந்திருப்பார்கள். அந்த மாதிரிகளை அல்ககோல் திரவத்தால் தொற்று நீக்கிய பின்னரே உள்ளே கொண்டு வருவார்கள். உள்ளே கொண்டு வரப்பட்ட மாதிரிகள் உயிர் பாதுகாப்பு அடைப்பகத்தில் வைத்து திறக்கப்படும். ஏனைய பிரித்தெடுப்பு செயன்முறைகள் அங்கே மேற்கொள்ளப்படும்.

உயிர் பாதுகாப்பு அடைப்பகம், வைரஸ் கிருமிகளை பிரித்தெடுக்கும் செயல்முறையைச் செய்பவருக்கோ அல்லது புறச் சுற்றாடலுக்கோ பரவாது தடுப்பதற்கு உதவும். அது


உயிர் பாதுகாப்பு அடைப்பகம்

நடந்து முடிந்த பின்னர் பிரித்தெடுக்கப்பட்ட இறைபோ நியூக்கிளிக் அமிலம் பாதுகாப்பாக அடுத்த படிமுறைகளுக்கு அனுப்பப்படும். பிரித்தெடுக்கும் செயன்முறைகள் முடிந்த பின்னர் வ்ரும் கழிவுப் பொருள்களை 121 பாகை வெப்பநிலையில் 15 நிமிடங்கள் கிருமி நீக்கம் செய்வோம். இத் தொற்று நீக்கிய கழிவானது அன்றைய தினமே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஊழியர்களால் எடுத்துச் செல்லப்பட்டு அதி உயர் வெப்பநிலையில் அழிக்கப்படும். சகல பணிகளும் முடிவடைந்த பின்னர் உயிர்பாதுகாப்பு அடைப்பகம் யுவிக் கதிர்கள் மூலம் கிருமி நீக்கம் செய்யப்படும். ஏனைய பகுதிகள் வெளிற்றி (ஹைப்போகுளோரிக் அமிலத்துடன் சேர்த்து 70 சதவீத அற்ககோல்) தெளித்து, துப்புரவு செய்யப்படும் என்று குறிப்பிட்டார்.

மேலதிகமாக விளக்கமளித்த முருகானந்தன், மாதிரிகளைக் கொண்டு வந்த உடனேயே முதலாவது பணியாக வைரஸை அழித்துவிடுவோம். பிரித்தெடுப்புச் செயன்முறையின் முதல்படியாக மாதிரியை, வைரஸ் கிருமிகளிலிருந்து இறைபோ நியூக்கிளிக் பிரித்தெடுப்பதற்கான திராவகத்தில் இடப்படும். பிரித்தெடுக்கப்பட்ட இறைபோ நியூக்கிளிக்கை உபயோகித்து குறித்த வைரஸின் மரபணு பகுதியைக் கண்டறியக் கூடிய 'பி.சி.ஆர்.' சோதனை மேற்கொள்ளப்படும்.

**கேள்வி:** சோதனைக்கான மாதிரிகள் யாரால் எடுக்கப்படுகின்றன? நோயாளர்களை அடையாளப்படுத்தி தருவது யார்?

**பதில் :** மூன்று விதமான மாதிரிகள் பெறப்பட்டு எங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

மருத்துவமனைக்கு சந்தேகத்தில் வருபவர்களிடமிருந்து மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு அனுப்பப்படுகின்றன.

இரண்டாவது சமூகத்திலிருந்து மாதிரிகள் பெற்று அனுப்பப்படுகின்றன. மதபோதகருடன் தொடர்புடையவர்கள் சுகாதார மருத்துவ அதிகாரிகளால் அடையாளப்படுத்தப்பட்டு அவர்களிடமிருந்து மாதிரிகள் பெறப்பட்டிருந்தன. அவர்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு காலத்துக்கு காலம் அவர்களிடமிருந்து மாதிரிகள் பெறப்படும். அது இரண்டாவது வகைக்குள் அடங்கும்.

மூன்றாவது, தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து மாதிரிகளைப் பெற்றுக் கொள்கின்றோம். அங்கு கொரோனா நோய்த் தொற்றுக்குரிய அறிகுறிகள் காணப்படுபவர்கள் அல்லது கொரோனா நோயாளியுடன் நெருக்கமாகத் தொடர்புடையவர்கள் என அடையாளம் காணப்படுபவர்களிடமிருந்து மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

இந்த மாதிரிகள் எல்லாவற்றையும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ள நன்கு பயிற்றப்பட்ட தாதிய உத்தியோகத்தர்களே எடுக்கின்றார்கள். *(மிகுதி நாளை)*

# அரசின் பித்தலாட்டங்களுக்கு துணைபோகப் போவதில்லை

## அரசு மோசமாகச் செயற்படுகிறதென்றும் கொந்தளிக்கின்றது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மே 4

**கொரோனா காலத்தில்கூட படு மோசமான செயற்பாடுகளையே அரசு செயற்படுத்துகின்றது. அரசின் அரசியல் பித்தலாட்டங்களுக்குத் துணைபோகப் போவதில்லை. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து இன்று நடத்தவுள்ள கூட்டத்தையும் புறக்கணிக்கவுள்ளோம் என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்திருக்கிறது.**

இது குறித்து அதன் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

முன்னாள் சபாநாயகரின் தலைமையில் நாடாளுமன்றைக் கூட்டுவது தான் தற்போதைக்கு நடைமுறைச் சாத்தியமான செயலாக அமையும்.

மீண்டும் பழைய நாடாளுமன்றைக் கூட்டுவதில்லை என்பதில் ஜனாதிபதியும் அரச தரப்பினரும் உறுதியாக இருக்கின்றனர். அதேவேளை, தமக்குச் சார்பான ஊடகங்களைப் பயன்படுத்தி அதற்கான பரப்புரைகளையும் முன்னெடுத்துச் செல்கின்றனர்.

அவ்வாறிருக்கையில், தற்போது அதே பழைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருடன் கூட்டமொன்றுக்கு அழைப்புவிடும் அரசின் இரட்டை வேடம் விசனமளிக்கிறது.

நாட்டில் கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்ததிலிருந்து நாம் பொறுப்பு வாய்ந்த எதிர்க் கட்சியாகவே செயற்பட்டு வருகின்றோம்.

ஜனவரி 24 ஆம் திகதி மற்றும் பெப்ரவரி 25 ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வுகளின்போதும் நாம் இதுபற்றிச் சுட்டிக்காட்டினோம். எனினும், அப்போதும் அரசு அசமந்தமாகவே செயற்பட்டுக் கொண்டிருந்தது.

நிலைமை மோசமடையத் தொடங்கிய பின்னர் கட்சித் தலைவர்களை ஒன்றிணைத்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் நாம் கலந்து கொண்டிருந்தோம்.

ஊரடங்கு உத்தரவை அரசு முறையற்ற விதத்தில் நடைமுறைப்படுத்தியதுடன் சமூக வலைத்தள செயற்பாட்டாளர்களைக் கைது செய்தது. அது மாத்திரமன்றி தமக்கு நெருக்கமானவர்களுக்கு 'வணிகர்களுக்கான ஊரடங்கு அனுமதிப்பத்திரத்தை' வழங்கியதுடன் நிவாரணப் பொருள்களை வழங்குவதிலும் அரசியல் நலன்களை அடைந்து கொள்வதற்கே முற்பட்டது.

சுமார் ஆறு வாரங்களாக மக்கள் மிகவும் பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் செயலாற்றினார்கள்.

அதற்குள் அரசு கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடும் என்ற நம்பிக்கையுடன் செயற்பட்டார்கள். ஆறு வாரங்கள் காலப் பகுதியில் அரசு அதனைச் செய்ய முடிந்திருக்கின்றதா?

உண்மையில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சியேற்பட்டிருக்க வேண்டும். ஆனால் இங்கு தொடர்ச்சியான அதிகரிப்பே ஏற்பட்டுள்ளது.

நாட்டில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் பிரிவினருக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கிறது.

இதிலிருந்து, சுகாதார நெருக்கடியைக் கையாள்வதற்கான முறையான வசதிகள், பயிற்சிகள் இல்லாமலேயே அவர்கள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது.

தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் நெருக்கடிநிலையில் எவ்வித அரசியல், கட்சி பேதங்களுமின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்று வலியுறுத்தி நாம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்திருந்த கடிதத்துக்கு எவ்வித துலங்கலும் காண்பிக்கப்படாதநிலையிலேயே, பிரதமர் தலைமையிலான இன்றைய கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் முன்னாள் சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றைக் கூட்டுவதொன்றே நடைமுறைச் சாத்தியமான செயலாக அமையும். - என்றார். (த)

# சகல பாடசாலைகளிலும் டெங்கு ஒழிப்புப் பணி

## ஆரம்பிக்குமாறு கல்வி அமைச்சு சுற்றறிக்கை



கொழும்பு, மே 4

மூடப்பட்டுள்ள பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள், கல்வியியற் கல்லூரிகள் உள்ளிட்ட அனைத்திலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சின் ஊடகப்பிரிவு இது தொடர்பில் குறிப்பிட்டுள்ளதாவது:

கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக இதுவரையில் மூடப்பட்டுள்ள அனைத்து பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள், கல்வியியற் கல்லூரிகள் உள்ளிட்ட அனைத்தையும் சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதுடன் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கல்வி அமைச்சர் உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்திருக்கிறார்.

பாடசாலை மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களையும் மீண்டும் ஆரம்பிப்பதற்கு. முன்னர் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கல்வி நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் சுத்தம் செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அது மாத்திரமின்றி பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம் என்பனவற்றின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுமாறும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிமனைகள் ஊடாக இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியும்.

அனைத்து வகையான சுத்தப்படுத்தல் நடவடிக்கைகளும் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைக்கு அமைய முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது கொரோனா தொற்றுப் போன்றே டெங்கு பரவலும் அதிகரிக்கின்றது என்று சுகாதார அமைச்சு தெரிவித்திருக்கின்றது.

பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று அரசு முன்னரே அறிவித்திருந்தபோதும் பின்னர் அது மீண்டும் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

# அரசியல் நெருக்கடி ஏற்பட வாய்ப்பில்லை

## பொதுஜன பெரமுன தெரிவிப்பு

கொழும்பு, மே 4

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே எதிர்த்தரப்பினர் கலைக்கப்பட்ட நாடாளுமன்றை மீண்டும் கூட்டுமாறு கோரிக்கை விடுக்கின்றார்கள். நிதி அதிகாரத்தை ஜனாதிபதி செயற்படுத்துவதால் எவ்வித நெருக்கடிகளும் ஏற்படாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சட்டத்தரணியும் சங்க உறுப்பினருமான சி தொலவத்த தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடைபெற்று புதிய அரசு கூடும் வரையில் அரச நிர்வாகத்துக்கான நிதியைப் பயன்படுத்தும் அதிகாரம் அரசமைப்பின் 150(3)ஆம் பிரிவின் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

புதிய அரசு தோற்றம் பெற்று மூன்று மாதங்களுக்கு நிதி தொடர்பான அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிதி அதிகாரத்தை எதிர்த்தரப்பினர் பல்வேறுபட்ட வழிமுறைகளில் கேள்விக்குட்படுத்தி கலைக்கப்பட்ட நாடாளுமன்றை மீண்டும் கூட்ட முயற்சிக்கின்றார்கள்.

நாடாளுமன்றைக் கூட்டுமாறு எதிர்த்தரப்பினர் பொது நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு குறிப்பிடவில்லை. சுய அரசியல் நோக்கங்களை அடைவதற்காகவே அழுத்தம் கொடுக்கின்றார்கள்.

கொரோனா வைரஸ் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பின்னரே பொதுத்தேர்தல் பாதுகாப்பான முறையில் நடத்தப்படும்-என்றார். (த)

# 'கருடா' விமானத்தில் வெளியேறினர் இந்தோனேசியர்கள்

கொழும்பு, மே 4

இந்தோனேஷிய அரசின் உதவியுடன் ஏற்பாடு செய்யப்பட்ட 'கருடா' என்ற சிறப்பு விமானத்தில் அதிகளவான இந்தோனேஷியர்கள் இலங்கையை விட்டு வெளியேறியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்படி இலங்கை மற்றும் மாலைதீவிருந்து 347 இந்தோனேஷியர்கள் வெளியேறியுள்ளனர் என்று கொழும்பிலுள்ள இந்தோனேஷிய தூதரகம் தெரிவித்துள்ளது. (த)

# மட்டக்களப்பில் கொரோனா இல்லை

மட்டக்களப்பு, மே 4

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்றுவரை எவருக்கும் கொரோனாத் தொற்று ஏற்படவில்லை, தடுப்பு முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்ட 62 பேருக்கு தொற்று உள்ளது என்பது கண்டறியப்பட்டு அவர்கள் காத்தான்குடி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மட்டக்களப்பு பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி எம். அச்சுதன் தெரிவித்தார்.

சுகாதாரப் பணிமனையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதைத் தெரிவித்தார்

மட்டக்களப்பில் கொரோனாத் தொற்று நோய் பரவாதவாறு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றோம்- என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

# ராஜபக்ஷக்கள் எழுந்தமானமாக செயற்படக்கூடாது

## ஐ.தே.க. தெரிவிக்கின்றது

கொழும்பு, மே 4

ஜனாதிபதியும் பிரதமரும் தங்கள் இஷ்டத்துக்கு ஏற்றாற்போல் செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்க மாட்டோம் என்று ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஸா விதானகே தெரிவித்துள்ளார்.



அரசு மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொள்ளாது ஜனநாயகத்தை மீறிச் செயற்பட்டால் மக்களின் நலனைக் காப்பதற்காக வீதியில் இறங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசு மேற்கொண்டு வரும் செயற்பாடுகள் தொடர்பில் தினந்தோறும் பேசி வந்தாலும், சிலசெயற்பாடுகள் திருப்திகரமாக இல்லை. சுகாதாரப் பிரிவினரின் முயற்சியாலேயே இந்தளவேனும் வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

அரசின் ஒரு சில தீர்மானங்கள் காரணமாகவே வைரஸ் அதிகளவில் பரவியிருந்தது. சுகாதாரப் பிரிவு வைரஸ் பரவல் தொடர்பில் எச்சரிக்கை செய்கின்றபோதிலும் அரசு சிந்திப்பதாகத் தெரியவில்லை.

பெருந்தோட்ட மக்கள் பலருக்கு இதுவரையிலும்5ஆயிரம்ரூபாநிவாரணம்கிடைக்கப்பெறவில்லை.

உரிய பகுதிகளின் மொட்டுக்கட்சியைச் சேர்ந்த பிரதேசசபை உறுப்பினர்களே இந்தப் பணத்தைப் பெற்றுக் கொடுப்பதில் இடையூறு விளைவித்து வருகின்றனர்.

225 மக்கள் பிரதிநிதிகள் இணைந்தே நிதி தொடர்பான தீர்மானங்களை முன்னெடுக்கவேண்டும். இதற்காகவே நாடாளுமன்றைக் கூட்டுமாறு அனைத்து எதிர்க்கட்சிகளும் கோரிக்கை விடுத்துவருகின்றன.

தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமாக இயங்குவதன் காரணமாகவே மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு தேர்தலைப் பிற்போட ஆணையாளர் தீர்மானித்தார். தொடர்ந்தும் அவர் அரசியல் வாதிகளின் கருத்துக்குச் செவிசாய்க்காமல் மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் வரும் வரையில் தேர்தலைப் பிற்போடுமாறும் தேர்தல்கள் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்- என்றார். (த)

# பந்துலவின் கருத்துக்கு கண்டனம்

கொழும்பு, மே 4

அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் கருத்துத் தொடர்பில் இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார உட்பட பல அரசியல் வாதிகள் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

நாட்டில் கொரோனா தாக்கம் காணப்படுகின்றபோதும் நாடாளுமன்ற தேர்தலை நடத்த வேண்டும் என்ற முனைப்புடன் அரசு செயற்பட்டு வருகின்றது.

ஆனால் நாட்டு மக்களின் நலன் கருதி பொதுத்தேர்தலை நடத்த வேண்டாம் என்று எதிர்க்கட்சிகள் அரசிடம் கோரிக்கை விடுத்து வருகின்றன.

“கடந்த வருடங்களில் டெங்குத் தாக்கத்தால் வருடாந்தம் 500க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழக்கும்போது தேர்தலை நடத்தாமலா இருந்தோம்?” என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவத்தன கேள்வியெழுப்பியிருந்த நிலையில் அதற்குப் பல தரப்பிலிருந்தும் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார தனது டுவிட்டர் பதிவில், “அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் கருத்து மிகவும் அறிவார்ந்த கருத்தா?” என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, “பந்துல குணவர்த்தன கூறியுள்ள முட்டாள்தனமாக கருத்து தற்போதைய அமைச்சரவை எப்படியானது என்பதை வெளிக்காட்டியுள்ளது” என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (த)

# ஊடக சுதந்திர குறிகாட்டியில் இலங்கை

## 127ஆவது இடம்

கொழும்பு, மே 4

2020 ஆம் ஆண்டு உலக ஊடகசுதந்திர குறிகாட்டியில் 180 நாடுகளில் இலங்கை 127 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. எனினும், கடந்த ஆண்டைவிட ஓர் இடம் பின் தள்ளப் பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டை விட 2.33 மதிப்பெண்களை அதிகமாகப் பெற்று 41.94 உலகளாவிய மதிப்பெண்ணை இலங்கை பெற்றுக் கொண்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு தொடக்கம் உலக ஊடக சுதந்திர குறிகாட்டியில் இலங்கை பின்தங்கிய நிலையிலிருந்து முன்னேறி வந்திருக்கிறது.

அதற்கமைய இலங்கை 2013 ஆம் ஆண்டு 162 ஆவது இடத்தையும், 2014 ஆம் ஆண்டு 165 ஆவது இடத்தையும், 2015 ஆம் ஆண்டும் அதே இடத்தையும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு 141 ஆவது இடத்தையும், 2018 ஆம் ஆண்டு131ஆவது இடத்தையும் கடந்த ஆண்டு 126 ஆவது இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது.

இந்த உலக ஊடக குறிகாட்டியில் முதல் மூன்று இடங்களை முறையே நோர்வே, பின்லாந்து மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் பெற்றுக் கொண்டுள்ளன.

அதேபோன்று எரித்திரியா, துர்க்மெனிஸ்தான் மற்றும் வடகொரியா ஆகிய நாடுகள் முறையே 178, 179 மற்றும் 180 என்ற இறுதி மூன்று இடங்களைப் பிடித்துள்ளன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (த)

# மிதிபலகையில் ஆடு கடத்தியவர் கைது

கொழும்பு, மே 4

மட்டக்களப்பு நகரிலிருந்து ஆயித்தியமலை பிரதேசத்துக்கு ஆடு ஒன்றை உரைப்பையில் அடைத்து மோட்டார் சைக்கிளின் மிதிபலகையில் வைத்து கட்டிக் கொண்டு சென்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஆடு உயிருடன் மீட்கப் பட்டுள்ளதாகவும் வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு வலையிறவு பொலிஸ் சோதனைச் சாவடியில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அவர் கைது கைதுசெய்யப்பட்டார்.

மிருகவதை மற்றும் அனுமதியின்றி ஆடு கொண்டுசென்றார் என்று இரண்டு குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட 35 வயதுடையவரின் உறவினரை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து அவரை நீதிமன்றில் எதிர்வரும் 4 ஆம் திகதி முற்படுமாறு உத்தரவிட்டு பொலிஸ் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)

# நோய்த்தடுப்பு மருந்துகள் கையிருப்பில் தாராளம்

## பணிப்பாளர் நாயகம் தெரிவிக்கின்றார்



இலங்கையில் போதுமானளவு நோய்த்தடுப்பு மருந்துகள் கையிருப்பில் உள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் நோய்த்தடுப்பு மருந்துகளுக்குப் பற்றாக்குறை நிலவுவதாகக் கூறப்படும் கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

# வறிய மக்களுக்கு அரசு உதவி வழங்கவேண்டும்

## முன்னாள் சபாநாயகர் கோரிக்கை

கொழும்பு, மே 4

நாட்டில் ஊரடங்கு மேலும் நீடிக்கப்பட்டுள்ள நிலையில், சாதாரண வறிய மக்களுக்கு அவசியமான பாதுகாப்பு உதவிகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியிருக்கிறார். தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் இது பற்றிப் பதிவிட்டுள்ளார்.

நாட்டில் ஊரடங்கு நிலைமை மேலும் நீடிக்கப்பட்டிருக்கிறது. இதனூடாக கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலைக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றமை தெளிவாகின்றது.



எனினும், சாதாரண வறிய மக்களின் அன்றாட வாழ்க்கையும் இயல்பாக நடைபெறுவதை உறுதிசெய்ய வேண்டியுள்ளது. தொடர்ச்சியாக ஏழாவது வாரமாகவும் நாம் ஊரடங்கு உத்தரவுக்கு உட்பட்டுள்ளோம். இந்தக் காலப்பகுதியில் அதிக தேவையுடைய, வறிய மக்களுக்கு அரசிடமிருந்து பாதுகாப்பு உதவிகள் தேவைப்படுகின்றன. அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்- என்றார். (த)

# மக்களுக்கான உதவி கிடைப்பதில் தாமதம்

## சித்தார்த்தன் தெரிவிக்கின்றார்

கொழும்பு, மே 4

கொரோனா ஒழிப்புத் தொடர்பில் அரசு எடுக்கும் நடவடிக்கை பாராட்டத்தக்கது. எனினும், மக்களுக்கான உதவிகள் கிடைப்பதில் தாமதம் காணப்படுகிறது. உதவித் திட்டங்கள் மக்களைச் சென்றடைவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பில் அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை. எனினும் கொரோனா முற்றாகத் தடுக்கப்பட்டுவிட்டது என்று காண்பிக்க எண்ணுவது தவறு.

பொதுமக்களும்விழிப்புணர்வுடன்நடந்துகொள்ளவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு புலம்பெயர்ந்து வாழும் மக்கள் உதவி செய்துவருகின்றார்கள் - என்றார் (த)

# யாழில் 7,450 ஏக்கரில் சிறுபோக பயிர்ச் செய்கை

## விவசாயத் திணைக்களம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 4**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் பயன்தரும் விவசாயச் செய்கை திட்டத்தின் கீழ் இந்தமுறை சுமார் 7 ஆயிரத்து 450 ஏக்கரில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளவுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையால் சில பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. சில பொருள்களை இறக்குமதிசெய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக்கொண்டு செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதி சிறுபோகக் காலமாக கணக்கிடப்பட்டு 16 வகையான பயிர்களுக்கு அரசு மானியம் வழங்குவதற்கு முன்வந்துள்ளது. கால் ஏக்கர் தொடக்கம் 5 ஏக்கர் வரை இந்த விதை மானியத் திட்டத்தின் கீழ் பயிரிட முடியும்.

சோளம், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், வெள்ளைப் பூடு, உளுந்து, நிலக்கடலை, குரக்கன், சோயா அவரை, கௌபி, எள்ளு, கொள்ளு, மஞ்சள், இஞ்சி, மிளகாய், பாசிப்பயறு போன்ற பயிர்கள் கால் ஏக்கர் தொடக்கம் அரை ஏக்கர் வரை பயிரிடும் விவசாயிகளுக்கு விதைக்கான முழுப் பணமும் அதற்கு மேற்பட்ட ஏக்கரில் பயிரிடுபவர்களுக்கு விதைக்கப்படும் விதையின் மொத்த பணத்தின் அரைவாசியும் வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த முறை சுமார் 7 ஆயிரத்து 450 ஏக்கரில் பயிர்ச் செய்கை நடைபெறுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-7)

# மருத்துவ நிபுணர்களை இடம்மாற்ற கோரிக்கை

கிளிநொச்சி, மே 4

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் நிரந்தர பொது மருத்துவ நிபுணர்களாக கடமையாற்றிவரும் இரு மருத்துவர்களை அங்கிருந்து உடனடியாக இடமாற்றம்செய்து புதியவர்களை நியமிக்குமாறு மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரியுள்ளது.

இதுபற்றி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்குக் கடிதம் எழுதியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அந்த இரண்டு மருத்துவ நிபுணர்களும் தங்களுடன் ஒத்துழைப்பதில்லை என்றும் அதனால் கொரோனா தடுப்பு நடவடிக்கையில் தடங்கல் ஏற்படுகிறது என்றும் மருத்துவ அதிகாரிகள் சங்கம் காரணம் குறிப்பிட்டுள்ளது. (த-214)

# போலி நாணய தாள்கள், ஹெரோய்னுடன் மூவர் கைது

கொழும்பு, மே 4

5ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் சகிதம் நேற்று மொரட்டுவ, லுனாவையில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் 120 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து அந்தப் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதலில் மொரட்டுமுல்லை பகுதியில் போலி நாணயத்தாள்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட கணினி மற்றும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன. 22,31 மற்றும் 40 வயதுடையவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

# ஓட்டோ திருடி அதன் பாகங்கள் விற்பனை

## *கறாஜ் நடத்துநர் கைது*

ஹற்றன், மே 4

ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த நிலையில், ஹற்றன் நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்றைத் திருடியதோடு, அதிலிருந்து பாகங்களைக் கழற்றி பிற முச்சக்கர வண்டிகளுக்குப் பொருத்தினார் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று ஹற்றன் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கடந்த 30 ஆம் திகதி இரவு ஹற்றன் நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியை ஹற்றன் வெலிஓயா பகுதியைச் சேர்ந்த ஒருவர் திருடிச்சென்று குறித்த பகுதியிலுள்ள முச்சக்கர வண்டி பழுதுபார்க்கும் நிலையத்தில் மறைத்து வைத்திருந்துள்ளார்.

பின்னர் அங்கு பழுதுபார்ப்பதற்காக கினிகத்தேன மற்றும் மஸ்கெலியா பகுதிகளிலிருந்து கொண்டுவரப்பட்ட முச்சக்கர வண்டிக ளுக்கு, திருடிய ஓட்டோவின் பாகங்களை கழற்றி பொருத்தியுள்ளமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் மேலும் பல பாகங்களை சந்தேகநபர் விற்பனை செய்துள்ளமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உதிரிப்பாகங்கள் மாற்றப்பட்ட இரண்டு முச்சக்கர வண்டிகள் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்களையும் ஹற்றன் பொலிஸார் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## கொரோனா நீடித்தால்

# தினமும் 6 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகள்

கொழும்பு, மே 4




கொரோனா வைரஸ் பரவல் நீடிக்குமாயின் நாளொன்றுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கையை 6 ஆயிரம்வரை அதிகரிக்க வேண்டும் என்று தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்கும்போக்கு அவதானிக்கப்படுமாயின் அதனைக் கட்டுப்படுத்துவதற்காக மேலும் முன்னெடுக்கப்பட வேண்டிய விசேட செயற்றிட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சு அமைத்திருந்த விசேட ஆலோசனைக் குழு கடந்த வெள்ளிக்கிழமை கூடியது. இதன் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டம் தொடர்பில் சுகாதார அமைச்சின் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த விசேட ஆலோசனைக் குழு வைத்திய நிர்வாகிகிகள், நிர்வாக அதிகாரிகள் மற்றும் விசேட மருத்துவர்கள் உள்ளிட்ட 35 உறுப்பினர்களைக் கொண்டது. இந்தக் குழு இரு நாள்களுக்கு ஒரு தடவை சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தலைமையில் கூடும்.

இதன்போது எதிர்காலத்தில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்கும் போக்கு அவதானிக்கப்படுமானால் நாளொன்றுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகளை 6ஆயிரமாக அதிகரிக்கவேண்டும்.

இதுவரையில் பி.சி.ஆர் பரிசோதனைகள் அரச மற்றும் 15 தனியார் ஆய்வு கூடங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும், இந்த ஆய்வு கூடங்களில் பணிபுரியும் சுகாதார ஊழியர்களுக்குத் தேவையான பாதுகாப்பு அங்கிகளைத் தட்டுப்பாடின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதனைவிட ஏனைய துறைகளிலும் வைரஸ் ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேண்டிய தனியாள் பாதுகாப்பு அங்கிகளை குறைவின்றிப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் பவித்திரா உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

எதிர்காலத்தில் அபாய வலயங்களில் திடீர் இடர் நிலைமைகள் ஏற்படும் பட்சத்தில் அந்தப் பகுதிகளில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் செயற்பாட்டு மையத்தால் முன்னெடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன் போது ஆராயப்பட்டது. அவை தொடர்பான ஆலோசனைக் கோவையொன்றை முன்வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சுகாதார அமைச்சின் செயலாளர் பத்ராணி ஜயவர்தன, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க, சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் பபா பலிஹவடன உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர் என்று அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன. (த)

# கப்பல் பணியாளர்கள் 230 பேருடன் வந்தது விமானம்

காலி துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள கப்பலொன்றுக்குத் தேவையான பணியாளர்களை உள்ளடக்கிய விசேட விமானமொன்று நெதர்லாந்திலிருந்து மத்தள விமான நிலையத்தை நேற்று வந்தடைந்தது.

அந்த விமானத்தில் 230 பேர் வந்தனர். அவர்கள் கிருமி ஒழிப்பு நடவடிக்கைகளின் பின்னர் காலி துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கப்பலிலிருந்த 53 பேரும், மத்தள விமான நிலையத்தில் இருந்து நெதர்லாந்து நோக்கிப் பயணிக்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# 33 குற்றங்களுக்கு உட்படாத கைதிகளுக்கு சலுகை

கொழும்பு, மே 4

தண்டனைச் சட்டக்கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள 33 குற்றங்க ளுக்கு உட்படாத கைதிகளுக்கு சலுகைகளை வழங்க சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெசாக் தினத்தன்று இதனை நடை முறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் எம். ஜே. டபிள்யூ. தென்னக்கோன் கூறி யுள்ளார்.

33 குற்றங்களில் தொடர்புபடாத 65 வயதுக்கும் மேற்பட்ட கைதிகளையே விடுதலைசெய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 7ஆம் திகதி வரை தண்டப்பணம் செலுத்த முடியாத குற்றத்துக்காக சிறையிலுள்ள கைதிகளையும் விடுதலை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த)

## அச்சிடல் பெறுகைக்கான அழைப்பு – 2020/2021

### மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மாகாணம்

### NP/PDE/PRO/PRI/2020/04

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுக்கான கீழ்வரும் விவரப்படியான அச்சிடலினை மேற்கொள்வதற்கு திணைக்கள பெறுகைக்குழு (பெரியது) முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றது.

| இல | அச்சிடலுக்கான விவரங்கள் | |
|---|---|---|
| A,B,C | புத்தகங்கள் | BOOKS |
| D | பரீட்சை வினாத்தாள்கள் | EXAM Paper |
| E | சான்றிதழ்கள் | CERTIFICATE |
| F | பதாதைகள் | BANNER |
| G | ஸ்ரிக்கர் | Sticker |
| H | விபரணங்கள் | Poster |
| I | இலக்கங்கள் | Numbers |
| J | அழைப்பிதழ்கள் | INVITATION |
| K | துண்டுப்பிரசுரம் | LEAFLETS |
| L | பாட் பைண்டிங் | PAD BINDING |
| M | வேலை அடையாள அட்டை | JOB IC |
| N | வேலை அட்டை | WORK CARD |
| O | வேலைத் தாள் | WORK Sheet |
| P | கோவை தயாரித்தல் | File Making |

2. பெறுகைகள் அனைத்தும் தேசிய விலைக்கேள்வி அடிப்படையில் நடைமுறைப் படுத்தப்படும்.
3. தகுதியான கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் தமது பெயர் வராது இருப்பதனை உறுதிப்படுத்தி கீழ்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அ) தற்பொழுதும் செல்லுபடியாக உள்ள அச்சிடலுக்கான வியாபாரச்சான்றிதழ்.

ஆ) பதிவானது வடமாகாணத்திற்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர் பெறுகை உள்ளடக்கம் II, இல் கூறப்பட்ட தகைமைகளினை நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.
5. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் **வட மாகாணக் கல்வித் திணைக்களத்தில்** கிடைக்கும் 'Application for Bid Documents' என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா **1,000/=** காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் **06.05.2020** தொடக்கம் **26.05.2020** வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
6. விலைக் கேள்விகள் **27.05.2020** திகதி **10.00** மணிக்கு முன்பதாக **வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதம** கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
7. கூறுவிலை சமரப்பித்தல் திகதியில் நாட்டில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலையால் அரசாங்க அறிவித்தலின்படி அலுவலகம் மூடப்பட்டிருப்பின் அடுத்துவரும் அலுவலக நாளில் அதே நேரம் சகல நடைமுறைகளும் அமுலில் இருக்கும்.
8. மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் பிரதம கணக்காளர் **வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின்** தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
9. இது தொடர்பான பெறுகை முன்னறிவிப்பு கூட்டம் (Pre bid meeting) 13.05.2020 காலை 10.00 மணிக்கு **வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின்** கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
10. கிடைக்கப் பெற்ற விலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக் கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுப்பட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**பெயர்** :- செ. உதயகுமார்

**பதவி** :- தலைவர்/மாகாணக் கல்விப் பணிப்பாளர், திணைக்கள பெறுகைகள் குழு (பெரிது).

**முகவரி** :- மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.செம்மணி வீதி, நல்லூர்

**தொலைபேசி** :- 021-2242804/021-2242800

**தொலைநகல்** :- 021-2242646/021-2241383

**மின்னஞ்சல்** :- npedufin@gmail.com

# சிறையுடைப்பு பிசுபிசுப்பு கைதி ஒருவர் உயிரிழப்பு

## மஹர சிறைக்குள் சம்பவம்

கொழும்பு, மே 4

மஹர சிறைச்சாலையிலிருந்து தப்பியோட முற்பட்ட 6 கைதிகள் பிடிபட்டனர் எனவும், ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும், சிறை அதிகாரிகள் இருவர் காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

நேற்று அதிகாலை 2.30 மணிக்கும் 3 மணிக்கும் இடையில் மஹர சிறைச்சாலையிலிருந்து கைதிகள் 7 பேர், கயிறு மற்றும் கட்டில் விரிப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி சிறைச்சாலை மதில் வழியாகத் தப்பியோட முற்பட்டுள்ளனர். கைதிகள் தப்பியோடுவதை தடுப்பதற்காக, சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரிகள் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இதனால் கைதிகள் எவராலும் தப்பியோட முடியாமல் போயுள்ளதோடு, அவர்களைக் காவலர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இதன்போது கைதி ஒருவர் பாய்ந்து செல்ல முற்பட்ட வேளையில் மதிலில் இருந்து தவறி வீழ்ந்த நிலையில் அவருக்குப் படுகாயம் ஏற்பட்டுள்ளது. சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ராகம மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தப்பியோட முற்பட்ட சிறைக் கைதிகளை தடுக்க முற்பட்டபோது, சிறைக் கைதிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்புக் காரணமாக சிறைச்சாலை அதிகாரிகள் இருவர் காயமடைந்து, சிகிச்சைக்காக ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஓ.5.22)

# கசிப்பு அருந்திய சந்தேகத்தில் 7 பேர் சாவகச்சேரியில் கைது

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் நேற்று கசிப்பு விற்பனை நிலையத்தில் கசிப்பு அருந்திக் கொண்டிருந்த ஏழு பேரையும் விற்பனையாளரையும் கைது செய்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை பொலிஸார் இந்தப் பகுதியில் நடத்திய பரிசோதனையில் விற்பனைக்கு வைத்திருந்த பெருமளவு கசிப்பையும் அதனைவிற்பனை செய்த பெண்ணையும் கசிப்பு அருந்திக் கொண்டிருந்த நால்வரையும்கைது செய்திருந்தனர்.

இதேவேளை தென்மராட்சிப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்த மக்கள் தமக்கு முழுமையான பங்களிப்பை வழங்கி வருகின்றனர் எனவும் பொது மக்கள் 1913 இலக்க தொலைபேசி இலக்கத்துக்கு கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பான தகவல்களை வழங்குமாறும் தகவல் தருவோரின் விவரங்கள் இரகசியமாகப் பேணப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஓ,5,9)

## மரண அறிவித்தல்



### முத்துசாமி இராஜலிங்கம்

யாழ். திருமகள் வீதியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துசாமி இராஜலிங்கம் 24.04.2020 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துசாமி மற்றும் சுந்தரம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற நாவற்குழி வேலுப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ராஜலட்சுமி மற்றும் விஜயலட்சுமி, ஜெயலட்சுமி, அமிர்தலிங்கம், ரஞ்சினி, ராகினி, ரவி, சுரேஷ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வராசா, வரதராசா, விமலேஸ்வரி, கமலேஸ்வரி, யோகேஸ்வரி, யோகேந்திரராசா, சிவகுமார், காலஞ் சென்ற பாலசுந்தரம் மற்றும், ரட்ணகுமார், ராஜேந்திரம், சாரதாதேவி ஜெகன், சின்னராசா, சிவலிங்கம், மதுவந்தி, லோகா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**வே.செல்வராசா**

## மரண அறிவித்தல்



### வீரப்பா மகிந்தன் (WUSC)

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், வவுனியா தெற்கிலுப்பைக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வீரப்பா மகிந்தன் நேற்று முன்தினம் (02.05.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வீரப்பா மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராஜகுலேந்திரன் மற்றும் மனோகராதேவி தம்பதியரின் மருமகனும், அனித்தாவின் (யா/பன்னாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், இதழிகாவின் அன்புத் தந்தையும், யசிந்தன் (R.D.A குருநாகல்), பிரதீபன் (வவுனியா), யசிப்பிரியா (D.O வவுனியா), விதுசன் (புகையிரத நிலைய அதிபர்-கொழும்பு) ஆகியோரின் சகோதரனும், நாராயணசாமி, சிவலிங்கம், நல்லம்மா, காமாட்சி ஆகியோரின் மருமகனும், சந்திரசேகரம், இராமச்சந்திரன், பாலகிருஸ்ணன், புஸ்பம், மகேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும், நக்கீரன் (வீரகேசரி -யாழ்ப்பாணம்), சரிதா (ஆசிரியை, அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாலயம்), பாலகாசன் (தேர்தல் திணைக்களம் - யாழ்ப்பாணம், றஜிதா (ஆசிரியை, சங்கானை ஸ்தான அமெரிக்க மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை), றஜீவன் (அபான்ஸ், கொழும்பு), சுஜித்தா ஆகியோரின் மைத்துனரும், மிதுர்னாவின் தாய் மாமனும், காலஞ்சென்ற கிருஸ்ணன் மற்றும் லட்சுமியின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2020) திங்கட்கிழமை சங்கானையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கரச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**

## ஆட்டையை...

இந்த விசாரணைக் குழுவினர் இந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வந்து விசாரணைகளை முன்னெடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு முன்னதாக இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பான ஆரம்பத் தகவல்களை அறிக்கையாக வழங்குமாறு யாழ்ப்பாண மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு, தேர்தல்கள் ஆணைக்குழுவால் கடிதம் தொலைநகல் மூலம் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கொரோனா காரணமாக தொடர் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. அப்போது அரசின் உதவிகள் யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு கிடைத்திருக்காத சூழலில் தன்னார்வக் கொடையாளிகளால் நிவாரணப் பொருள்கள் மாவட்டச் செயலகத்துக்கு வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்க வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்கள், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், வேட்பாளருமான ஒருவரின் ஆதரவாளர்களுக்கு மாவட்டச் செயலக அதிகாரிகளால் வழங்கப்பட்டமை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் கட்சிகளின் செயலர்களுடன் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற கூட்டத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, குறித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் இத்தகைய கீழ்த்தரமான செயற்பாடு தொடர்பில் கடும் விசனத்துடன் கருத்துக்களை முன்வைத்துள்ளார். மேற்படி விவகாரம் தொடர்பில் மூவர் கொண்ட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும், விசாரணை முடிவில் அதிகாரிகள் தவறிழைத்திருந்தமை உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களுக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு அமைவாக மூவர் கொண்ட விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, இந்த விடயம் தொடர்பான ஆரம்பத் தகவல்களை வழங்குமாறு யாழ்ப்பாண மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது. (ஒ,5,105)

## ஒரே நாளில்...

பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

இலங்கையில் நேற்றுமுன்தினம். வரை மொத்தமாக 25 ஆயிரத்து 26 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சுகாதார தரப்பில் இருந்து அறியமுடிகின்றது. (ஒ,5,44)

## திட்டமிட்ட...

திட்டமிட்டவாறு ஜூன் மாதம் 20ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கத்தையடுத்து நாடாளுமன்றத் தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு ஒத்தி வைத்தது. தேர்தலை ஒத்திவைக்கும் போது ஜூன் மாதம் 20ஆம் திகதி தேர்தல் இடம்பெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு அதிவிசேட வர்த்தமானி மூலம் அறிவித்திருந்தது. எனவே, நாடாளுமன்றத் தேர்தலை திட்டமிட்ட திகதியில் தேர்தல்கள் ஆணைக்குழு நடத்தியே ஆகவேண்டும். அதற்குரிய சகல அதிகாரங்களும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இருக்கின்றது. கொரோனா வைரஸ் தாக்கத்தையோ அல்லது பழைய நாடாளுமன்றத்தை மீளக்கூட்டுமாறு கோரும் யோசனையையோ அல்லது அரசமைப்பைக் காரணம் காட்டி வர்த்தமானி அறிவித்தல் விடயத்தையோ அல்லது வேட்புமனுத் தாக்கல் விவகாரத்தையோ காரணம் காட்டி நாடாளுமன்றத் தேர்தலைக் குழப்பியடிக்கும் வகையில் யாராவது வழக்குத் தொடுத்தால் அதற்குரிய பதிலை நீதிமன்றத்துக்கு நான் வழங்குவேன் என்றார். (ஒ,5,22)

## 21 மாவட்டங்களில்...

சட்டம் தளர்த்தப்படும்.

அதன் பின்னர், புதன்கிழமை இரவு 8 மணிமுதல் 11 ஆம் திகதி காலை 5 மணி வரை நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (க-44)

## கொரோனா...

காணப்பட்டதைத் தொடர்ந்து, தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 702 இலிருந்து 705 ஆக அதிகரித்திருந்தது. இந்தநிலையில் நேற்றுக் காலையிலிருந்து இரவு வரை 13 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 705 இலிருந்து 718 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 12 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய இதுவரை குணம டைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 184 ஆக உயர்ந்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 718 பேரில் தற்போது 527 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, 176 பேர் வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (எ-22)

## கூட்ட...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்கும் அழைப்பு விடுத்து இன்றைய கூட்டத்தை பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ நடத்த இருந்தார். ஆனால், அவர் நேற்று திடீரென கூட்ட ஒழுங்கமையில் அதாவது அழைப்பாளர் பட்டியலில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்.

கடந்த நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் மாத்திரமன்றி அதற்கு முன்னரான நாடாளுமன்றங்களில் பிரதிநிதித்துவம் வகித்த உறுப்பினர்களுக்கும் பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்குமான விசேட கூட்டத்தை அவர் தற்போது பொதுக்கூட்டமாக மாற்றம் செய்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் இன்றைய கூட்டத்தைப் புறக்கணிக்கின்றமையால் ஆள்சேர்ப்புக்காக இந்தத் தீர்மானத்தைப் பிரதமர் எடுத்துள்ளார் எனவும் எமக்கு ஒரு தகவல் கிடைத்தது. எனினும், இந்த ஒழுங்கமைப்பு மாற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இது தொடர்பான் எமது அதிருப்தியை பிரதமரிடம் நாம் நேரில் தெரிவிப்போம் என்றார். (ஒ,5,22)

## வாள்வெட்டில்...

சேர்ந்த எஸ்.விஜயகுமார் (வயது 40) என்பவரே உயிரிழந்தார்.

ஒன்றுவிட்ட சகோதரியின் கணவருடன் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியதால் மைத்துனர் வாளால் வெட்டியதில் சகோதரர்கள் மூவர் காயமடைந்தனர். பின்னர் இவர்கள் திருப்பித் தாக்கியதில் மைத்துனர் படுகாயமடைந்தார். பின்னர் அவர் ஆபத்தான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் சாவடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (க9)

## இந்த மாதமும்...

னித்துள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே மாதத்துக்கான கொடுப்பனவை வழங்கும் நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஏப்ரல் மாதத்துக்கான கொடுப்பனவுகள் வழங்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள நிலையில், இந்த மாதத்துக்கான கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதேவேளை, முதியோருக்கான கொடுப்பனவு, ஓய்வூதியம் என்பற்றையும் வெசாக் தினத்துக்கு முன்னர் வழங்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## கூட்டமைப்பின்....

சேனாதிராசா நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சிகளில் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் பிரதமர் மஹிந்தவின் கூட்டத்தைப் புறக்கணிக்கின்றார்கள் என்பதற்காக நாமும் கூட்டத்தைப் புறக்கணிக்க முடியாது. எமது நிலைப்பாடுகளை பிரதமரிடத்தில் நாம் நேரில் தெரிவிக்க வேண்டும். அரசின் குறைபாடுகளை நாம் நேரில் சுட்டிக்காட்ட வேண்டும். அதற்குரிய தளமாக இன்று காலை 10 மணிக்கு அலரி மாளிகையில் நடைபெறும் கூட்டத்தைப் பயன்படுத்துவோம்.

அதற்கு முன்னர் இன்று காலை 8 மணிக்கு கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் ஒன்றுகூடிப் பேசவுள்ளோம். அதன் பின்னர் எமது நிலைப்பாடுகள் மற்றும் குறைபாடுகளை பிரதமரின் கூட்டத்தில் எடுத்துரைக்கவுள்ளோம் என்றார். (ஒ,5,22)

## 113....

கட்சியுடன், தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பினர் மட்டுமே இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

கலைக்கப்பட்ட பழைய நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், அலரி மாளிகையில், இன்று காலை 10 மணிக்கு கலைக்கப்பட்ட பழைய நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கான கூட்டத்தை நடத்துவதற்கான அழைப்பை பிரதமர் மஹிந்த ராஜபக்ச விடுத்திரு ந்தார்.

எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் 127 உறுப்பினர்களில் 94 பேர் அந்தக் கூட்டத்தில் பங்கேற்கமாட்டார்கள். முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் கீழுள்ள 87 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அக்கட்சியின் 19 உறுப்பினர்கள், ஜே.வி.பியின் 6 உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் அங்கம் வகித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரே இதில் பங்கேற்கமாட்டார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியினருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள்14 பேர் மட்டுமே இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ22)

## நாடு...

வேண்டும். அதன்பின்னரே தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது

எமது இந்த நிலைப்பாட்டை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரிடமும் நேரில் தெரிவித்துவிட்டோம். எனவே, மக்களின் சிரமங்களை உணர்ந்து கொண்டு தேர்தல் ஆணையாளர் தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும்.

கொரோனா வைரஸ்தான் நாட்டின் இன்றைய நிலைமையைத் தலைகீழாக மாற்றியமைத்துள்ளது. இந்த நிலைமை பழைய நிலைமைக்குத் திரும்ப வேண்டும். நாட்டில் சுமுகமான நிலைமை ஏற்பட வேண்டும். அதன்பின்னர்தான் தேர்தல் நடைபெற வேண்டும்.

**பிரதமரின் கூட்டத்தில் பங்கேற்போம்**

அலரி மாளிகையில் பிரதமர் தலைமையில் இன்று நடைபெறவுள்ள முன்னாள் எம்.பிக்களுக்கான கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் பங்கேற்பார்கள். இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினர் பங்கேற்பார்கள் என்றே நாம் எதிர்பார்த்தோம். ஆனால், இறுதி நேரத்தில் கூட்டத்தைப் புறக்கணிக்கும் தீர்மானத்தை அவர்கள் எடுத்துள்ளார்கள். அது அவர்களின் விருப்பம். எமது விருப்பம் பிரதமரின் கூட்டத்தில் பங்கேற்பதே யாகும்என்றார். (எ-22)

## சஹ்ரானுடன் தொடர்பு தொண்டு நிறுவுநர் கைது

கொழும்பு,மே 4

உயிர்த்த ஞாயிறன்று நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களின் முதன்மைச் சூத்திரதாரி சஹ்ரான் ஹாசிமின் பரப்புரைகள் மற்றும் ஆயுதப் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்து வழங்கிய தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் நிறுவுனர் குற்றவியல் விசாரணைப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துளார்.

2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறன்று நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் தொடர்பில் குற்றவியல் விசாரணைப் பிரிவினர், பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். கடந்த மாதம் சட்டத்தரணி ஹிஸ்புல்லா, ரிசாத் பதியூதீனின் சகோதரர் உட்பட 5 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டனர். இந்த நிலையில் சஹ்ரான் ஹாசிமின் பரப்புரைகள் மற்றும் ஆயுதப் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்து வழங்கிய தன்னார்வத் தொண்டு நிறுவன நிறுவுநரான கல்பிட்டியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க)

# இந்தியக் கிரிக்கெட்டில் ஏற்பட்டுள்ளது குழப்பம்!

## கோலி, சாஸ்திரிக்கு எதிராக திரும்புகின்றார் எம்.கே.பிரசாத்





புதுடெல்லி, மே 4

இந்தியக் கிரிக்கெட்டுக்குள் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. முன்னாள் தெரிவுக் குழுத்தலைவர் எம்.கே.பிரசாத் இந்திய அணியின் அப்போதைய தெரிவுக்குழு சுதந்திரமாகச் செயற்பட அணித் தலைவர் கோலியும், தலைமைப் பயிற்சியாளர் ரவி சாஸ்திரியும் அனுமதிக்கவில்லை - என்றவாறாகக் கருத்துத் தெரிவித்துள்ளார். டெஸ்ட் ஆட்டங்களில் முச்சதம் விளாசிய இரண்டாவது வீரராக கருண் நாயர் உள்ளார். எனினும் அவர் தொடர்ந்து வாய்ப்புக்கள் வழங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டார். முன்னாள் தேர்வுக் குழுத் தலைவரான பிரசாத் கருண் நாயர் புறக்கணிக்கப்பட்ட மைக்கு தனது வருத்தத்தைத் தற்போது தெரிவித்துள்ளார்.

கருண் நாயர் குறித்து பிரசாத் தெரிவித்ததாவது:

குறிப்பாக கருண் நாயர் முச்சதம் அடித்த பிறகும் கூட இந்திய டெஸ்ட் அணியில் அவரை மீண்டும் எடுக்காமல் விட்டது வருத்தமளிக்கிறது. இங்கிலாந்து தொடரில் இருந்தார் ஆனால் அணியில் வாய்ப்பு கிடைக்கவில்லை. சர்வதேச கிரிக்கெட்டில் முச்சதம் எடுத்துவிட்டு தனது மறு வாய்ப்புக்காக கஷ்டப்பட்ட ஒரு வீரர் என்ற வகையில் மிகவும் அரிதானதே. இது உண்மையில் இருதயத்தை நொறுங்கச் செய்கிறது. அவருக்கு மட்டுமல்ல எங்கள் அனைவருக்கும்தான்' என்றார்.

சென்னையில் சேவாக் தென் ஆபிரிக்காவுக்கு எதிராக 319 ஓட்டங்கள் விளாசிய பிறகு வலுவான இங்கிலாந்துக்கு எதிராக கருண் நாயர் 303 ஓட்டங்கள் எடுத்தார். இந்தியா அந்தப் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகன், தொடர்நாயகன் விருதையும் கருண் நாயர் தட்டிச் சென்றார்.

பெரிய நட்சத்திர வீரர் பிறந்து விட்டார் என்று உலகம் வியந்த தருணத்தில் அதன் பிறகு 3 போட்டிகளில் மட்டுமே கருண் நாயர் விளையாடினார். இதற்கான பொறுப்பை பிரசாத் அப்போதே ஏற்றிருக்க வேண்டும், 'கோலி ஏன் கருண் நாயரை விரும்பவில்லை என்பதை பிரசாத் அம்பலப்படுத்தியிருக்க வேண்டும் அதை விடுத்து ஒரு வரது கரியரையும் கனவுகளையும் சிதைத்துவிட்டு இன்று முதலைக் கண்ணீர் வடித்து தனது செயலுக்கு நிவாரணம் தேட முயற்சிப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. (ம)



## என் ஆலோசகர் டோனியே: பன்ட் வெளிப்படைப் பேச்சு

புதுடெல்லி, மே 4

இலக்குக் காப்பைப் பொறுத்தவரையில் எனது ஆலோசகராக டோனியே உள்ளார் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் இளம் இலக்குக் காப்பாளர் ரிசப் பன்ட்.

இது தொடர்பில் பன்ட் மேலும் தெரிவித்ததாவது:

கிரிக்கெட் களத்துக்கு உள்ளேயும், வெளியேயும் எம்.எஸ்.டோனி எனக்கு ஒரு ஆலோசகர்போல் உதவியுள்ளார். எந்தவொரு பிரச்சினையை நான் சந்தித்தாலும் அவரை எளிதில் அணுகலாம். பிரச்சினைக்கு முழுமையான தீர்வை அவர் ஒருபோதும் சொல்லமாட்டார். ஏனெனில் நாம் முழுமையாக அவரைச் சார்ந்து இருக்கக்கூடாது என்று நினைப்பார். பிரச்சினையை சரி செய்தவற்கான குறிப்புகளை மட்டும் கூறுவார். அது நாம் பிரச்சினையைத் தீர்க்க உதவிகரமாக இருக்கும்.

அவர் எனக்கு மிகவும் பிடித்தமான துடுப்பாட்ட இணை. அவர் களத்தில் இருக்கையில், நிலைமைக்கு தகுந்தபடி விளையாடுவது குறித்த திட்டத்தை தெளிவாக வைத்திருப்பார். அந்தத் திட்டத்தை நாம் பின்பற்றினால் போதுமானது - என்றார். (ம)



## களத்தில் விளையாடுகின்ற நாளை எதிர்பார்க்கின்றேன்!

### *ரோகித் ஏக்கம்*


புதுடெல்லி, மே 4

மைதானத்துக்குள் இறங்கி அதிரடியாக விளையாடும் நாளை மீண்டும் எதிர்பார்க்கின்றேன் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் துணைத் தலைவரும் அதிரடி வீரருமான ரோகித் சர்மா.

பிரபல இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் ரோகித் மேலும் தெரிவித்ததாவது:

உள் அரங்கில் கிரிக்கெட் விளையாட போதுமான இடமிருந்தால் நன்றாக இருக்கும் என விரும்புகிறேன். ஆனால் மும்பையில் இடங்கள் எல்லாம் நெரிசலாக காணப்படுகின்றன. எனவே அபார்ட்மெண்டை விட்டு வெளியேற முடியாது. மும்பையில் விளையாட்டுப் பகுதிகளை உள்ளடக்கிய சொந்த வீடு வாங்குவது அவ்வளவு எளிதல்ல. இங்கு எல்லாம் விலை அதிகம். நான் அபார்ட்மெண்டில் வசிக்கிறேன். எனது பயிற்சியாளர் கூறியபடி உடற்பயிற்சி செய்து வருகிறேன். உடற்பயிற்சிக் கூடங்களை விரைவில் திறப்பார்கள். அப்போது அங்கு சென்று பயிற்சி மேற்கொள்வேன். மைதானத்தில் இறங்கி அதிரடியாக விளையாடும் நாளை எதிர்பார்க்கின்றேன் என்றார். (ம)

## இந்திய கால்பந்தாட்ட ஜாம்பவான் கோஸ்வாமி மாரடைப்பால் மறைவு



புதுடெல்லி, மே 4

இந்திய கால்பந்தாட்ட ஜாம்பவான் கோஸ்வாமி மாரடைப்பால் நேற்று உயிரிழந்தார். இந்திய கால்பந்து அணியின் முன்னாள் தலைவரான சுனி கோஸ்வாமி கடந்த சில மாதங்களாக பல்வேறு நோய்களால் அவதிப்பட்டு வந்தார். இந்த நிலையில் கொல்கத்தாவில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

இந்திய கால்பந்து உலகில் பிரபலமான வீரர்களில் ஒருவராக திகழ்ந்தவர் சுனி கோஸ்வாமி. ஒருங்கிணைந்த பெங்காலில் உள்ள கிஷோர்கஞ்ச் மாவட்டத்தில் (தற்போது வங்காளதேசத்தில் உள்ளது) 1938ஆம் ஆண்டு பிறந்த கோஸ்வாமி இளம் வயதிலேயே கால்பந்து விளையாட்டு மீது ஆர்வம் கொண்டார். மோகன் பகான் கழகத்தில் இணைந்த அவர் அதில் சிறப்பாக விளையாடி அதன் மூலம் இந்திய அணிக்குள் நுழைந்தார். (ம)

## ரசலின் அதிரடிக்கு நிகர் கிடையாது!

### *கில் சொல்கின்றார்*

புதுடெல்லி, மே 4

ரசலின் அதிரடிக்கு எவராலும் நிகர் நிற்க முடியாது - என்று தெரிவித்துள்ளார் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடிவரும் வீரரான சுப்மன் கில்.

ரசலின் அதிரடி தொடர்பில் கில் தெரிவித்ததாவது:

கொல்கத்தா அணிக்காக ரசலுடன் இணைந்து விளையாடக்கிடைத்தது அரிய, சிறந்த சந்தர்ப்பம். அவரின் அதிரடிக்கு எவராலும் நிகர் நிக்க முடியாது. ஒரு முனையில் ரசல் துடுப்பெடுத்தாடும்போது மறுமுனையில் நிற்பதென்பது ஹைலைட்ஸ் பார்ப்பது போன்று இருக்கும் என்றார். (ம)



# தென்கொரிய எல்லையில் வடகொரியா குண்டுமழை

## தீபகற்பத்தில் பீதிநிலை

**பியாங்யாங், மே 4**

**வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், பொதுவெளியில் தோன்றிய இரு நாள்களில் தென்கொரிய எல்லையில் குண்டு மழை பொழிந்துள்ளது வடகொரியா. தென்கொரியாவும் இதற்குப் பதிலடி கொடுத்துள்ளது.**



கொரியத் தீபகற்பத்தில் பிளவின் பின்னர் வடகொரியாவும், தென்கொரியாவும் கடும் பகையாளிகளாக உள்ளன. எனினும் தென்கொரியாவின் அதிபராக மூன் ஜெ இன் பொறுப்பேற்ற பின்னர் வடகொரியாவுடன் நட்புப் பாராட்ட ஆரம்பித்தார். இதன் பின்னர் இரண்டு நாடுகளின் உறவுக்கிடையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. வடகொரியா - அமெரிக்கா இடையில் ஏற்படும் என்று கருதப்பட்ட அணுவாயுத மோதலும் இதனால் தவிர்க்கப்பட்டது. எனி னும் வடகொரியா மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா நீக்காத காரணத்தால் இரண்டு நாடுகளுக்கும் இடையில் மீண்டும் மோதல்போக்கு ஏற்பட்டதுடன் வடகொரியா - தென்கொரியா இடையிலான நட்புறவும் அறுந்தது.

இதற்கிடையே வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் கடந்த 20 நாள்களாக பொதுவெளியில் தோன்றாமல் இருந்தார். இதனால் அவர் இறந்துவிட்டார் என்றும், கிம்முக்கு மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை தோல்வியில் முடிந்ததால் அவர் மூளைச் சாவடைந்துவிட்டார் என்றும் வதந்திகள் உலவின. இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக கிம் கடந்த இரு நாள்களின் முன்னர் பொது நிகழ்வொன்றில் தோன்றியிருந்தார். கிம் பொதுவெளியில் தோன்றிய இரண்டே நாள்களில் தென்கொரிய எல்லையில் குண்டுமழை பொழிந்துள்ளது வடகொரியா.

'வடகொரியாவால் தென்கொரிய எல்லையில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. பதிலுக்கு தென்கொரியாவும் தாக்குதல் நடத்தியது. எனினும் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை' - என்று தென்கொரியாவின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## 106 வயது மூதாட்டி கொரோனாவிலிருந்து உடல்நலம் பெற்றார்

பிரான்சில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட 106 வயது மூதாட்டி கொரோனாவில் இருந்து நலம் பெற்றுள்ளார்.
ஹெலன் லெபவ்ரே என்ற அந்த மூதாட்டி முதியோர் இல்லம் ஒன்றில் வசித்து வருகின்றார். கடந்த 15ஆம் திகதி நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் அவருக்கு கொரோனா ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. பின்னர் தனிமைப்படுத்தப்பட்ட அவர் கொரோனா தொற்றில் இருந்து தற்போது முழுவதுமாகக் குணம் பெற்றுள்ளார். (ம)

**விற்பனைக்கு**
மணல், சல்லி, 6x9 கற்கள், சீமெந்து கற்கள் என்பவற்றை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
**T.P:076 760 3066, 070 159 9046**

## தலைதூக்குகிறது ஐ.எஸ் அமைப்பு!

பக்தாத், மே 4
ஈராக் நாட்டில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு நடத்திய தாக்குதலில் 6 பொலிஸார் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து ஈராக்கில் ஐ.எஸ் அமைப்பு தலைதூக்குகின்றது என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.
ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுததாரிகளை முற்றிலும் ஒழித்துள்ளோம் என்று ஈராக் அறிவித்துள்ள போதிலும் அவ்வப்போது அங்கு பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்த அந்த அமைப்பு கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டுதான் வருகின்றது. இந்த நிலையில் தலைநகர் பக்தாத்துக்கு அருகில் மேற்கொள்ளப்பட்டு இந்தத் தாக்குதல் அங்கு அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது. (ம)





## பிரான்ஸில் ஜூலை இறுதி வரையில் மருத்துவ அவசர நிலை!

பரிஸ், மே 4
கொரோனா வைரஸ் காரணமாக பிரான்ஸ் நாட்டில் ஜூலை 24ஆம் திகதி வரை மருத்துவ அவசரநிலை நீட்டிக்கப்பட்டுள்ளது.
உலகையே உலுக்கிவரும் கொரோனா வைரஸ் 210 நாடுகளுக்கு பரவியுள்ளது. ஐரோப்பிய நாடான பிரான்சில் ஒரு லட்சத்து 68 ஆயிரம் பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை சுமார் 25 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். வைரஸ் தாக்கம் தீவிரமடைந்த நாள் முதல் அங்கு மருத்துவ அவசர நிலை நடைமுறையில் உள்ளது.
இந்த நிலையில், கொரோனாவின் தீவிரம் இன்னும் குறையாத நிலையில் நாடு முழுவதும் அமுலில் உள்ள மருத்துவ அவசரநிலை ஜூலை மாதம் 24ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.